Free Circulation Germany-England-Swiss
மாசி Feb.2019

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950
Successful Publishing 25 Years in Europe
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel:0231 162377
Fax:0231 147836

# இருள்காலமும் உளச்சோர்வும்

## இனி மாற்ற முடியாத மாற்றங்கள்




Page.08

S.K.Silks & Gold Paraadise
அசத்தலான தெரிவுக்கு நம்மை நாடுங்கள்
Tel:0231 9501 647

உங்கள் மனங்கவர் ஆடைகளை மனங்கவர்ந்தவர்களுக்கு அளித்து காதலர் தினத்தை கலக்குங்கள்


Mr.P.Sritharan.Proprietor
Adler str 33 - 44137 Dortmund

MITCHAM (UK) U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.12

Gopara Gnanam GMBH
Tel:0231 5450028 Mob:0171 330 6542
Rheinische str.81 - 44137 Dortmund
Page.19

StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.39

தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி

# கண்டறியாத காதலன்

கலாநிதி பால.சிவகடாட்சம்.



அவன் பெயரென்ன? ஊரென்ன? தொழில் என்ன? எதுவுமே அவளுக்குத் தெரியாது. அவனை அவள் நேரிலே பார்த்ததும் கிடையாது. அவள் அவனைப் பற்றி அறிந்து கொண்டதெல்லாம் அவனை அறிந்தவர்கள் மூலமே.

முதலில் அவனது பேரைக்கேட்டாள். அடுத்து அவனது தோற்றம் பற்றிக்கேட்டாள். பின்னர் அவனிருக்கும் ஊர்பற்றிக் கேட்டறிந்தாள். அவற்றையெல்லாம் கேட்டபின்னர் அவன்மீது கொண்ட தீவிரமான காதலினால் பித்துப்பிடித்தவள் போலானாள்.

அன்னையையும் தந்தையையும் அன்றே விட்டுச் சென்றாள். அவள் வாழ்ந்த ஊரார் ஆண்டாண்டு காலமாகப் பேணிவந்த கட்டுப்பாட்டை மீறினாள். (ஒரு ஆண் தான் விரும்பும் பெண்ணைத் தேடிச் செல்லலாம், ஆனால் ஒரு பெண் ஆணைத் தேடிச் செல்லக்கூடாது என்பதுதான் அந்தக் கட்டுப்பாடு) காதலினால் தன்னை மறந்தாள், தன் பெயரைக் கெடுத்துக்கொண்டாள். காதலனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்தாள்.

இத்தனைக்கும் அவள் அவனைப்பற்றி என்னதான் கேட்டறிந்திருப்பாள்? அவனுக்கு என்று ஒரு பெயர் கிடையாது. ஓர் உருவம் கிடையாது. பிச்சைக்காரக் கோலத்திலும் அவன் இருப்பான். சுடுகாட்டிலும் வாழ்ந்திருப்பான். இவற்றைத்தானே அவள் கேள்விப்பட்டிருத்தல் கூடும்.

இவற்றையெல்லாம் கேட்டபின்னரும்கூட அவன்மேல் தீராத காதல் கொண்டாள். ஆம். "பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்." இருந்தும் அவளையும் அவனையும் அறிந்தவர்கள் அவளைத் திட்டவில்லை. மாறாக அவள் காதலைப் போற்றிப் பாடினார்கள்.

அப்பாடலைக் கோயிலில், அவள் தலைவன், அந்த இறைவன் முன்னிலையில் பாடி மகிழ்ந்தார்கள். முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள் மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள் பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள் பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள் அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்

அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத் தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

அப்பர் சுவாமிகள் பாடிய இக் காதல் கதையினால் கவரப்பட்ட கவிஞர் கண்ணதாசன் தானும் அக்காதலை இக்காலத்தவரும் கேட்டு மகிழத் தனது இனிய தமிழில் பாடிவைத்தார்.

அன்றொருநாள் அவனுடைய பேரைக்கேட்டேன்
அடுத்தநாள் அவனுடைய ஊரைக்கேட்டேன்
இன்றுவரை அவன் முகத்தை நானும் காணேன் - அவன்
என்னைத்தேடி வரும்வரையில் விடவும் மாட்டேன்

அந்தக் காதலி அவனைத் தேடிச் சென்றாள். இந்தக் காதலியோ அவன் தன்னைத் தேடிவருவான் என்ற நம்பிக்கையில் காத்திருக்கின்றாள்.

The lover who never showed up Once she asked about his name Then she learned about his appearance
Later she inquired about his country Yet,* she fell madly in love with him.

She deserted her mother and father She freed herself from the restraint imposed by age old customsShe forgot who she was and lost consciousness of her reputation She surrendered to the feet of her lover

*The saint says "yet" because what the girl could have learned about that person is that he had no name, no specific countryto claim as his own, dresses in anattire of a beggar and spends his timealone on cremation ground (at the end ofthe universe).

This story about the devotion of a young girl to Lord Siva was sung in one of his hymns by the Saiva saint Appar. Poet Kannadasan was so impressed by this wonderful story he adopted the hymn to compose his own poem to express the unbound love of a young girl towards her hero.

One day I learned his name
The next day I asked about his country
Until now I have not seen his face, yet
I will not let him go until he comes
looking for me.

நன்றி.தமிழ்த்தகவல்.











வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை 270



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com

"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276

# மகாசங்கத்தினர் போர்க்கொடியினால் கைவிடப்படும் புதிய அரசியலமைப்பு

– கொழும்பிலிருந்து பாரதி –

புதிய அரசியலமைப்பு இதோ வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் சொல்லிக் கொண்டிருக்க, அதனை முன்னகர்த்த முடியாமல் தடுத்துள்ளார்கள் மகாசங்கத்தினர். மூன்று வருடகால மாகத் தொடர்ந்த அரசியலமைப்பாக்க முயற்சியில் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் அலுமாரியில் வைத்துப் பூட்டப்பட்டுவிட்டதாகவே தெரிகின்றது.

"புதிய அரசியலமைப்பு இப்போது அவசியமில்லை. தேர்தல்களை நடத்துவதே இப்போதைக்கு முக்கியம்" என இலங்கையின் மிகவும் சக்திவாய்ந்தவராகக் கருதப்படும் மல்வத்த மகாநாயக்கர் திபட்டுவாவே சிறி சுமங்கல தேரோ திட்டவட்டமாகக் கூறிவிட்ட நிலையிலேயே அரசியலமைப் பாக்க முயற்சிகள் கைவிடப்படும் எனத் தெரிகின்றது.

அமைச்சர்கள் உட்பட ஐதேக எம்.பி.க்கள் சிலர் மல்வத்த மகாநாயக்கரை சந்தித்த போதே இதனை அவர் உறுதியாகக் கூறினார். புதிய அரசியலமைப்பைக் கொண்டு வரும் முயற்சிகளுக்கு சிங்களக் கடும் போக்காளர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு உருவாகியிருக்கும் பின்னணி யிலேயே மகாநாயக்கரும் தனது நிலைப்பாட்டை இப்போது பகிரங்கமாக்கியிருக்கின்றார்.

மகாநாயக்கரின் இந்த நிலைப்பாடு ஐதேகவுக்கு சங்கடமான ஒரு நிலையைக் கொடுத்திருக்கும். அரசியல மைப்பை உருவாக்கும் முயற்சிகளைக் கைவிட்டுவிடு வதற்கும் அவர்களுக்கு இது உதவலாம். இது அதிகளவுக்கு நெருக்கடியைக் கொடுக்கப்போவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத்தான்.

புதிய யாப்பை உருவாக்குவதற்கு எதிராக தென்பகுதியில் எழுந்திருக்கும் எதிர்ப்புக்களின் பின்னணியில், தமது நிலைப்பாட்டை மகாநாயக்கர்களுக்கு விளக்குவதற் காகவும், மகாநாயக்கர்களின் நிலைப்பாட்டை நாடிபிடித்துப் பார்க்கவும் ஐதேக அமைச்சர்களும் எம்.பி.க்களும் இந்தச் சந்திப்பை மேற்கொண்டார்கள். மல்வத்த மகாநாயக்கரை மட்டுமன்றி, அஸ்கிரிய மகாநாயக்கரையும் அவர்கள் சந்தித்தார்கள். அஸ்கிரிய மகாநாயக்கருடனான அவர்களு டைய பேச்சுக்களின் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இலங்கை அரசியலமைப்பில் மகாநாயக்கர்களுக்கு என முக்கியமான இடமோ அந்தஸ்த்தோ உத்தியோகபூர்வ மாகக் கொடுக்கப்படவில்லை. ஆனால், எழுதப்படாத ஒரு சட்டமாக நாட்டின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் மகாநாயக்கர்களின் ஆலோசனையைப் பெறுவது வழமை யாக இருக்கின்றது. புதிதகப் பதவியேற்கும் அமைச் சர்கள், தலைவர்கள் முதலாவதாக மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசிபெறுவதும், ஆலோசனை கேட்பதும் வழமை.

மகாநாயக்கர்களின் கருத்துக்களுக்கு எதிராக அரசாங்கம் செயற்பட்ட ஒரு சந்தர்ப்பம் என்றால், அது 1987 ஆம் ஆண்டு இலங்கை இந்திய உடன்படிக்கையில் ஜனாதிபதி ஜெயவர்த்தன கைச்சாத்திட்டதைக் குறிப்பிடலாம். இந்திய அழுத்தம் காரணமாக மகாநாயக்கர்களின் கருத்தைக்கூட கேட்காமல் அந்த உடன்படிக்கையை ஜெயவர்த்தன ஏற்றுக்கொண்ட போது, நாடே சுடுகாடாகியிருந்தது. ஆனால், அதன்மூலம்தான் 13 ஆவது திருத்தம் பிறந்தது.

அரசாங்கம் ஒன்று இருந்தாலும், அதற்கும் மேலாக



திரு.சம்பந்தன்

இது ஒரு தொடர்கதை...

அதிகாரத்தைக் கொண்டவர்களாக மகாநாயக்கர்கள் இருக்கின்றார்கள். இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடாக இருப்பதால் மகாநாயகர்களுக்குச் சவால்விடும் வகையில் செயற்பட எந்தத் தலைவருமே முன்வருவதில்லை. அது தமக்கு ஆபத்தானது என்பது அவர்களுக்குத் தெரியும். அவ்வாறு செயற்பட்டால் தம்மீது தேசத்துரோக முத்திரை குத்தப்பட்டு, அரசியலிலிருந்து ஒதுங்கவேண்டி நிலை வரலாம் என்ற அச்சமும் அவர்களுக்கு இருக்கின்றது.

புதிய அரசியலமைப்பு தொடர்பில் மகாநாயக்கர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும், அதன் மூலம் அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்றுத்தான் அடுத்த கட்ட நகர்வை முன்னெடுக்க முடியும் என்ற நிலையிலேயே அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லை தலைமையிலான ஐதேக குழுவினர் மகாநாயக்கர்களைச் சந்தித்தார்கள். மகாநாயக் கர்களின் நிலைப்பாடு எவ்வாறானதாக இருக்கும் என்பதை ஓரளவுக்குத் தெரிந்துகொண்டுதான் அவர்கள் அங்கு சென்றிருக்கின்றார்கள் என எதிர்பார்க்கலாம்.

இதன்போது அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லை தெரிவித்த கருத்துக்களும் முக்கியமானது. "அரசியலமைப்புக்கான நகல் யோசனை எதனையும் அரசாங்கம் முன்வைக்க வில்லை. பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது வழிநடத்தல் குழுவின் ஒரு அறிக்கை மாத்திரமே. எனவே, அரசியலமைப்புக்கான நகல் ஒன்று முன்வைக்கப் பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் சொல்வது நியாயமற்றது" எனவும் அமைச்சர் கிரியெல்ல கூறியிருக்கின்றார். அதாவது, புதிய அரசியலமைப்பாக்க முயற்சிகளைப் பொறுப்பேற்க ஐதேக தயாராகவில்லை என்பது அவரது பதிலில் பிரதிபலிக்கின்றது.
ஐதேக குழுவினர் மகாநாயக்கர்களுக்குத் தெரிவித்த கருத்துக்களும் கவனத்துக்குரியவை. அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு கொடுக்கப்பட்டுள்ள அதி உயர் அந்தஸ்த்து தொடர்ந்துதும் பாதுகாக்கப்படும் எனக் குறிப்பிட்டிருக்கின்றார் அமைச்சர் தயா கமகே. மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப் படாது என உறுதியளித்திருக்கின்றார் அமைச்சர் ரஞ்சித் மதும பண்டார. இதனை மறுவழமாகப் பார்த்தால் "நாம் சிறுபான்மையினருக்கு எதனையுமே கொடுக்கப்போவ தில்லை" என்பதை மகாநாயக்கர்களிடம் உறுதியாகக் கூறிவிட்டுச் செல்வதற்காகத்தான் அவர்கள் கண்டிக்கு வந்திருந்தார்கள்.

தொடர்ச்சி 10ம் பக்கம்



# பயம்



## பறந்து வந்து பருப்பு போட்ட இந்தியாவின் இராணுவம்

JUDE PRAKASH

கமல்ஹாசன் ஒரு ஈழத்தமிழன் கதாபாத்திரம் ஏற்று நடித்த தெனாலி திரைப்படத்தில் வரும் “எல்லாம் சிவமயம் என்று சொல்லுவினம்.. ஆனா எனக்கு எல்லாம் பயம் மயம்” என்று தொடங்கும் வசனத்தை யாரும் பயத்திலும் மறந்திருக்க மாட்டார்கள். சாதாரண மனிதர்கள் எல்லோரும் எதற்கோ இல்லை யாருக்கோ பயப்பிடுவார்கள், பயமறியாத மனிதர்களை யுகப் புருஷர்களாக உலகம் கொண்டாடும்.

“பயம் என்பது வாழ்க்கையின் பாதுகாப்பு” என்று தனது இரும்புக்குதிரைகள் நாவலில் எங்கோ ஒரு இடத்தில் பாலகுமாரன் எழுதியதாக ஞாபகம். உண்மைதான், பயம் தான் நம்மை பல விஷயங்களில் கவனமாக இறங்கவும், சில விஷயங்களை செய்யாமலே விடவும் காரணியாக அமைந்து விடுகிறது. வாழ்க்கையில் சின்னனிலேயே பயத்தை முதல் முதலாக விதைத்தது அம்மாவாகத் தான் இருக்க வேண்டும். “படி..படி..படி” என்று பூவரசம் தடியாலும் விறகாலும் அடித்து அடித்து படிக்க வைக்க அம்மா ஊட்டியதும் பயம் தான்.

நடேசபிள்ளையும் சிதம்பரப்பிள்ளையும் எழுதிய கணிதப் பயிற்சிப் புத்தகத்தை திரும்ப திரும்ப செய்ய வைத்து, கணிதத்தில் புலியாகா விட்டாலும் பரவாயில்லை, என்னை பேராதனை பல்கலைக்கழகத்திற்கு போய் ஒரு பொறியியலாளனாக வரவைக்க ஆசைப்பட்ட அம்மா கையில் எடுத்த ஆயுதமும் பயம் தான்.

ஒழுக்கநெறிகளில் பரி யோவான் தான் தலைசிறந்த பள்ளியென்று பெயரெடுத்தது என்றால், அதற்கு அடித்தளமாக அமைந்தது , மாணவர்களை வழிநடத்த பரி யோவானின் syste த்தில் ஊறிப் போயிருந்த கருமம் பயம் தான்.

பரி யோவான் வளாகத்தில், வெள்ளையும் சொள்ளையுமாய் ஆனந்தராஜா மாஸ்டர் கம்பீரமாக நடந்து வருவதை பார்க்கும் போதும் பயம் வரும், Primary schooly துரைச்சாமி மாஸ்டர் கண்டிக்கும் போது பயம் வரும், குழப்படி செய்யும் போது தேவதாசன் மாஸ்டர் ஓங்கி அறையும் போதும் பயம் வரும்.

Middle School ற்கு வந்தால் style ஆக நடந்து வந்து, நுனி நாக்கில் English பேசி, பரி யோவானின் ஒழுக்கக் கோவையை கண்மணி போல் காத்த தனபாலன் மாஸ்டரால் “கவனிக்கப்படும்” போதும் பயம் வரும்.

பிரபாகரன் மாஸ்டர் male staff room ஆல் இறங்கி, ஒரு பக்கம் சாய்த்து கொண்டே தானெடுக்கப் போகும் வகுப்பை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்க, அருளானந்தம் block லும் ராஜசிங்கம் blockலும் இருக்கும் அத்தனை வகுப்புகளும் அலை அடித்து ஓய்ந்த கரையைப் போல நிசப்தமாவதும் இந்தப் பயத்தால் தான்.

### சகடையின் பீக்குண்டிற்கும் பயந்து பயந்தே கழித்த இளமைப் பருவத்தை!

கோட்டையில் இருந்து கூவிக் கொண்டே வரும் ஷெல்லுக்கும், பலாலியில் இருந்து பறந்து வரும் ஆட்டிலெறிக்கும், ஹெலியடிக்கும் 50 கலிபருக்கும், பொம்மரின் குத்துக் கரணத்திற்கும், சகடையின் பீக்குண்டிற்கும் பயந்து பயந்தே கழித்த இளமைப் பருவத்தை இன்று நினைத்தாலும் வருவதும் பயம் தான்.

வடமராட்சியை பிடித்த ஆமி, யாழ்ப்பாணத்திற்கும் வரப் போகுதாம் என்று பயந்து கொண்டிருக்க, பறந்து வந்து பருப்பு போட்ட இந்தியாவின் இராணுவம், எங்களது ஊர்களிலும் வீதிகளிலும் நிலையெடுத்து பயப்பிடுத்திய நாட்களை இன்று நினைத்தாலும் வருவதும் அதே பயம் தான்.



**மனிசிக்கு பயந்தது போல் பாசாங்கு செய்து கொண்டே பயப்பிடாமல் செய்ய வேண்டியவற்றை செய்து கொண்டு போவதும் ஒரு அழகிய கலை தான்.**

அதிகாலையில் இந்திய இராணுவம் சுற்றி வளைத்து, படுக்கையால் தட்டியெழுப்பி, சந்தியில் குந்த வைத்து, முகமூடிக்கு முன்னால் கொண்டு போய் நிறுத்தும் போது பயம் பேய் பயமாகும்.

இந்திய இராணுவ காவலரணைக் கடக்கும் போது, சைக்கிளால் இறங்கி நடந்து போகும் போது, அந்த நாய் கூப்பிடக் கூடாது என்று மனதுக்குள் கர்த்தரைக் கும்பிட்டுக் கொண்டு போகும் போதும், கூடவே வருவதும் பயம் தான்.
எண்பதுகளின் இறுதியில், இந்திய இராணுவத்தோடு இணைந்த மண்டையன் குழு, கட்டாய ஆட்சேர்ப்பிற்கென பிள்ளை பிடி வண்டிகளில் யாழ் நகரெங்கும் அலைந்து திரிந்த நாட்களில், பாடசாலைக்கும் போக முடியாமல், ட்யூஷனிற்கும் வர முடியாமல், வீட்டுக்குள் முடங்கியே இருந்த போதிலும், எங்களோடு அகலாமல் இருந்தது பயம் மட்டும் தான்.

OL, AL, பரீட்சை நாட்கள் வந்து விட்டாலே பயம் தொடங்கி விடும். அந்தக் கேள்வி வருமா இந்த யசநயவில் வருமா என்று மனம் ஒரு பக்கம் பயத்தில் பதைபதைக்க, பரீட்சை பெறுபேறுகள் மீதான குடும்பத்தாரின் அளவுக் கதிகமான எதிர்பார்ப்பு வேறு பயத்தை பலமடாக்கி விடும்.

கொழும்பு வீதிகளில் உலாவத் தொடங்கினால், பொலிஸிற்கும் ஆமிக்கும் பயம். நடந்து போனால் நிற்பாட்டி IC கேட்டு விசாரிக்கும் போதும், பஸ்ஸால் இறக்கி உடம்பை தடவிப் பார்த்து சோதிக்கும் போதும், இனமானத்தால் தூண்டிவிடப்பட்ட கோபம் பொத்துக் கொண்டு வந்தாலும், பயம் அந்த கோபத்தை மேவி விட, பயத்துடனே அந்த நீண்ட பொழுதுகள் கடக்கும்.

பருவம் வந்து காதல் தொற்றிக் கொள்ள, பார்க்கும் பெட்டையை தூரத்தில் கண்டாலே, ஏதோ ஒரு பயம் ஏனோ வந்து ஒட்டிக் கொண்டு விடும்.

தொடர்ச்சி 08 ம் பக்கம்.








Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
பதிவுக்கு முந்துங்கள்...
Sommer Offer
599 €
குறுகிய காலத்திற்கு மட்டுமே!
பதிவுக்கு முந்துங்கள்!
46 Kg
Gulf Air
GULF AIR GRAND PRIX 2010
Departure:Date: Weekday- Departure FRC- CMB
01.07.2019- 01 - 21.07.2019
03.07.2019 -03 - 23.07.2019
04.07.2019 -04 - 28.07.2019
05.07.2019 -05 - 30.07.2019
06.07.2019 -06 - 02.08.2019
08.07.2019 -01 - 03.08.2019
10.07.2019 -03 - 04.08.2019
19.07.2019 -05 - 17.08.2019
20.07.2019- 06 - 18.08.2019
22.07.2019 -01 - 20.08.2019
24.07.2019 -03 - 23.08.2019
25.07.2019 -04 - 24.08.2019
26.07.2019 -05 - 25.08.2019
27.07.2019 -06 - 27.08.2019
29.07.2019 -01 - 30.08.2019
31.07.2019 -03 - 31.08.2019
01.08.2019 -04 - 01.09.2019
02.08.2019 -05 - 03.09.2019
03.08.2019 -06 - 06.09.2019
05.08.2019 -01 - 07.09.2019
08.08.2019 -04 - 08.09..2019
Mob:No: 0179 1484 892
e.mail:siva 0108 @hotmail.com
Vettimaniy Ltd
QATAR AIRWAYS القطرية
Emirates
طيران الخليج
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171
www.Lucky-fly.de




U.K

## Bharatham

*From My Perspective*

லண்டனில்

Sangeetha jewellers இல்


புத்தகங்கள் தேவையானோர் நேரில் சென்று
பதிவு செய்து இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

யேர்மனி
வாணி நர்த்தனாலய அதிபர்
**கலாநிதி வானதி தேசிங்குராஜா**
அவர்கள் எழுதிய
**Bharatham from my Perspective**
என்னும் ஆங்கில நூலினை
முத்திரை அனுப்பி இலவசமாகப்
பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:0049 176 38 97 83 61



# இனி மாற்ற முடியாத மாற்றங்கள்

– மாதவி



நானும் பாக்கிறேன் நீங்கள் தமிழ் பிள்ளைகள்தானே! நீங்க இருவரும் சகோதரர்கள்தானே! ஏன் இப்படி யேர்மன் மொழியில் பேசுகின்றீர்கள். வெளியில் போகும்போது, அல்லது கடையில் நிற்க்கும்போது யேர்மன் மொழியில் பேசினால், அங்கு நிற்பவர்கள் ஒரு மாதிரிப்பார்ப்பார்கள் என்று சொல்கிறீங்கள். சரி இப்ப வீட்டில் உங்களைப் பெற்ற அம்மாவும், அப்பாவும்கூடவா ஒருமாதியாக உங்களைப் பார்ப்பார்கள்?

வீட்டில் தமிழில் பேசுங்கோ! இந்த பேச்சு இன்று நடைபெறாத வீடுகள் இல்லை. அப்படி நடைபெறவில்லை என்றால், ஒன்று முன்பு சொல்லிச் சொல்லி முடியாது என்று கைவிட்டிருக்கவேண்டும். அல்லது யேர்மன் மொழியில் பேசுவது எமக்கு பெருமைதானே என்ற ஒரு வித பெருமிதம் காரணமாக இருக்கவேண்டும்.

இப்ப சொல்லவருவது என்னவென்றால் நாம் தலைகீழாக நின்றாலும் இந்த மாற்றம் இனி மாற்ற முடியாத ஒரு மாற்றமே! சும்மா ஊருக்குபோனால் அல்லது பிற நாடுகளுக்கு போனால் பிள்ளைகள் எல்லாம் தமிழில்தான் பேசுவினம் என்று சொல்வது, எம்மை நாமே சும்மா உசுப்பேத்தி மகிழ்விப்பதாகவே அமையும்.

இன்னும் சிறிதுகாலத்தில் தமிழில் பேசுங்கள் என்று சொல்லும் பெருசுகள் மறைந்துவிடுவார்கள். பிறமொழியில் பேசுபவர்கள் எந்த தடங்கலும் இன்றிப் பேசுவார்கள்.
இதற்கு பிள்ளைகள் மட்டும் பிழையல்ல. காலம் சூழல் இவற்றை நாம் அமைத்துக் கொடுத்துவிட்டு நாம் நொந்து பயன் இல்லை. நமது பிள்ளைகளுடன் சரி அவர்களது பிள்ளைகளுடன் அவர்கள் தாய்மொழியில் பேச மாட்டார்கள். அவர்கள் வாழும் நாட்டு மொழியே தாய்மொழியாகிவிடும். இது மாற்ற முடியாத மாற்றம்.

திருமணங்கள்

சரி தாய்மொழிக்கு இந்த நிலை என்றால் நம் கலாச்சாரம் கரைந்து வேறுவடிவம் பெற்றுவிட்டது. இதனை தமிழர் திருமணங்களில் பார்க்கலாம்.
மணமகன் மணமகள் உடைகள் எல்லாம் மும்பாய் ஆச்சு. ஆட்டம் பாட்டம் இவையும் அவர்கள் ஆச்சு. முதலிரவு என்றபெயர் கனிமூன் ஆச்சு. முன்பின் கண்டு தெரியாதவர்கள் எல்லாம் அரசியல் கூட்டணி அமைத்தால் போல் ஆங்காங்கே ஒன்றாக அமர்ந்து இருக்க. உணவு பரிமாறுபவர்கள் இலக்கம் பார்த்து தவறாது சிற்றூண்டி பரிமாற. திருமணம் ஓகோ என்று முடியும். மணமக்களின் பெற்றோர் உறவினர்கள் யார் யார் என்பதனை புகைப்படம் எடுக்கும் வரிசைவைத்து தெரிந்து கொள்ளலாம். அல்லது கன்னிகாதானம் செய்யும்போது அறிந்து கொள்ளலாம்.

இந்த நிலையில் சிற்றூண்டி உணவு பந்தியில் பரிமாறும் வேளை உறவினர்கள் நண்பர்களை ஒவ்வொருவராக நலம் விசாரித்து. எப்படி அப்பா இருக்கிறார். அம்மா என்ன செய்யிறா. அந்தக்காலத்தில் உங்கள் அம்மா உங்க வீட்டுக்கு வந்தால் எங்களுக்கு சாப்பாடு தராமல் விட மாட்டா இப்பவும் உங்கள் அம்மாவைக்கும் உருளைக்கிழங்கு பிரட்டல் அப்பப்பா!!! என்று சொல்லியபடியே பந்தியில் இருப்பவருக்கு குழம்பு விட்டால் பரிமாறுபவர் மனமும் உண்பவர் மனமும் துள்ளும். அந்த சுகம் இப்ப இல்லை. காதலிப்பது மட்டும் தான் அன்று நாமாக இருந்தோம். ஆனால் திருமண ஒழுங்கு முழுவதும் பெற்றவர் கரங்களிலேயே இருந்தது. பலகாரச்சூடு அதற்கு வரும் சொந்தங்கள். அலங்காரம் அது பிள்ளைகளின் நண்பர்கள். இப்படி உறவுகள் நண்பர்களின் கொண்டாட்டமாக இருந்தது. இப்போ பெற்றோரே மண்டபத்திற்கு விருந்தினர்போல் வந்து போகிறார்கள்.


அதுமட்டுமன்றி தமிழர் தமிழர்களைத்தான் திருமணம் செய்வேண்டும் என்று எண்ணம் காணாமல் போகும். காதல் இயல்பாக வருவது அது இயல்பாகவே வருங்காலத்திலும் வரும். எனவே இவையாவும் இனி மாற்ற முடியாத மாற்றம்.

ஆலயங்களை எடுத்துக்கொண்டால் ஒரு சிறு கிராமத்தில்கூட பல ஆலயம் இருக்கும். சிவன்கோவில் அம்மன் கோவில், பிள்ளையார் கோவில்,முருகன் கோவில்,காளிகோவில்,வயிரவர் கோவில், நாகம்மாகோவில், கிருஷ்ணன்கோவில், இங்கே இன்று அனைத்தும் ஒரே கூரையின் கீழ் வந்துள்ளது. இது போக்குவரத்து நேரத்தை மீதப்படுத்துவதற்காகவும் அமைந்திருக்கலாம். அது மட்டுமன்றி வழிபாட்டுமுறைகளும் பாரிய மாற்றத்திற்குள்ளாகி விட்டது. தெய்வங்களும் தாயகத்தில் நாம் காணாத வழிபடாத பல தெய்வங்களாக இன்று பிரகணப்படுத்தப்பட்டு வழிபடப்படு கின்றது. (கடவுள் எங்கும் உள்ளார் எனவும் கொள்ளலாம்.) இவை இனி மாற்றமுடியாத மாற்றமாகிவிட்டது.

முகப்புத்தகம்.
முகப்புத்தகத்தில் தாயகத்தில் வறுமையான மக்களுக்கு உதவுவது அவர்கள் நன்றியோடு அவற்றை பெற்றுக் கொள்வது. கால் ஊனமுற்றவர் களுக்கு நாற்காலி வண்டில் வழங்குவது. இப்படி பல அரியதொண்டுகளை நம்மவர்கள் செய்கிறார்கள்.

தொடர்ச்சி 10 ம் பக்கம்.






With pleasure we announce the winners of the 6th edition of Tamil Eelam's Got Talent:
Kids:
1st place: Mersal Kids
2nd place: Abinaalaya
3rd place: Vithu's Juniors

Adult:
1st place: Suruthy Sothinathan
2nd place: Suji's Dance Creation
3rd place; Killadys

Best performer: Thanusan Sivarajah

Thanks to:
Judges: Nirujan Sehasothy, OliviaT, Jeya Raveendran
Hosts: Bharathy Maheswaran & Sarujan Mohanaranjan

Foto: Koness fotos .com

# பயம்

04ம் பக்கத் தொடர்ச்சி

"ஓராயிரம் பார்வையிலே உன் பார்வையை நான் அறிவேன்" என்ற பாட்டின் BGM மனதில் ஒலித்தாலும், இதயம் படபடக்கும், நாக்கு உலரும், தொண்டைக்குள் ஏதோ அடைக்கும், அந்தப் பெட்டையை கடந்து போகும் வரை பயமும் கூடவே பயணிக்கும்.

கல்யாணம் கட்டி குடும்பம் நடாத்த தொடங்கினால், மனிசியும் பயப்பிடுத்த தொடங்கி விடும். அம்மாக்கு பயந்து, ஆசிரியருக்கு பயந்து, ஆமிக்கு பயந்து பழகிய வாழ்க்கையும், இயல்பாகவே இந்தப் புதிய பயத்திற்கும் இயைபாக்கம் அடைந்து விடும்.

மனிசிக்கு பயந்தது போல் பாசாங்கு செய்து கொண்டே பயப்பிடாமல் செய்ய வேண்டியவற்றை செய்து கொண்டு போவதும் ஒரு அழகிய கலை தான்.

அண்மையில், நமக்கு பழக்கமான அண்ணர் ஒருத்தரை Party முடிந்து அவரது வீட்டில் இறக்கி விட்டோம். காரால் இறங்கியதும் அண்ணருக்கு மனிசியின் நினைவோ பயமோ வந்து விட்டது. "உள்ளுக்க புலியொன்று படுத் திருக்கடா" வீட்டை காட்டி அண்ணர் சொன்னார் "இப்ப ஒரு சிங்கம் வீட்டுக் குள்ளேபோக போது பாரடா", நாங்களும் பயத்தோடு பார்த்திருந்தோம்.

அண்ணர் கதவை தட்டுவதும் "darling.. ஐ am here..please open the door.. darling" என்று intercom ல் கெஞ்சுவதும் நமது காதுகளில் ஒலிக்க தொடங்க, நாங்கள் காரை நகர்த்த தொடங்கினோம், நமக்கும் பயம் வரத் தொடங்கியிருந்தது.

வாழ்க்கைச் சக்கரத்தில் கடைசியாக இணைந்து பயப்பிடுத்த தொடங்கி யிருக்கும் சீவன்கள், ஆசை ஆசையாய் பெத்து வளர்த்த பொடிப் பிள்ளையள் தான். Party க்கு போனால் அப்பர் தண்ணியடிக்கிறாரா என்று வேவு பார்ப்பது, பிறகு காரில் வரும் போது நக்கலாக "அப்பா ஏன் நீங்க drive பண்ணேல்ல" என்று விசாரிப்பது, பிறகு alcohol is bad for health என்று பள்ளியில் சொல்லிக் கொடுத்ததை அப்படியே பிரசங்கமாக ஒப்புவித்து விசரேற்றுவது, என்று தங்கள் பாணியில் அவங்களும் பயங்காட்ட தொடங்கி விட்டதை நினைக்க பயமாகத் தானிருக்கிறது.

பள்ளியிலும் உறவுகளின் பாலும் வரும் பயத்தை சும்மா பயமாக மட்டுமே பார்க்க கூடாது. பயம் என்பது, நாங்கள் ஒழுக்கத்தோடும் கட்டுப்பாட்டோடும் வாழ, எங்களை சுற்றி போடப்படும் அன்பு வேலியாகவே அணுக வேண்டும்.

வேலியில்லாத மிருகங்கள் கட்டாக்காலியாகி அலைவதைப் போல, எங்களது வாழ்வும் தறிகெட்டு போகாமல் இருக்க ஆண்டவன் அமைத்துத் தந்த வேலிக்குப் பெயர் தான் பயம்.



# இருள்காலமும் உளச்சோர்வும்

## Seasonal Affective Disorder [SAD]



Seasonal Affective Disorder [SAD]

**Dr. புஷ்பா கனகரட்ணம் , Ph.D., C. Psych.**
**Clinical Psychologist**

குளிர் காலம் வந்துவிட்டால், கட்டிலில் இருந்து எழுந்திருப்பதே பெரும் பிரயத்தனமாக தோன்றலாம். வேலையில் உற்சாகமாக, சுறுசுறுப்பாக இருப்பது கடினமாக தோன்றலாம். எம் ஊர் விட்டு இவ்வளவு தொலைவில் இருக்கும் இந்த நாட்டுக்கு ஏன் வந்தோம் என்று கூட நாம் மனவருத்தப்படலாம். இப்படி எல்லாம் தோன்றுவதற்கு காரணம் இருக்கிறது. ஏனென்றால், நம் உலகை எம் புலன்களால் தான் நாம் அனுபவிக்கிறோம். எங்கள் இயக்கத்திற்கும் உற்சாகத்திற்கும் சூரியன் ஒரு முக்கிய காரணம்.

சூரிய ஒளியில் குறைபாடு ஏற்படும்போது, எங்களுக்கும் பாதிப்பு ஏற்படத்தான் செய்கிறது. Circadian rhythm என்று அறிந்திருப்போம் - 24 மணிநேரத்தில் எமக்கு ஒரு குறிப்பிட்ட நாள்- பொழுதில் நல்ல உற்சாகமாகவும் ஒரு குறிப்பிட்ட நாள்-பொழுதில் உடல் அலுப்பாகவும் இருக்கிறதல்லவா? உடலின் Circadian rhythm தான் இதற்கு காரணம். எங்கள் மூளையின் பின்புலத்தில் இருந்து எங்கள் உறக்கத்தையும் விழிப்பையும் ஒழுங்குபடுத்தும் ஒரு 24-மணி நேர உடல்-கடிகாரம் இது. எங்கள் சூழலின் இருளும், ஒளியும் எங்கள் உடல்-கடிகாரத்தை கட்டுப்படுத்துகிறது. சூரிய ஒளியில் குறைபாடு ஏற்படும்போது எங்கள் மூளையின் இரசாயனத்தில் மாற்றம் ஏற்படுவதோடு உடல்-கடிகாரமும் மந்தம் அடைகிறது.

பிரகாசமான சூரிய ஒளி இல்லாது போகும்போது, மூளை, நித்திரைக்குரிய ஹோர்மோன் Melatonin இனை தொடர்ச்சியாக குறைந்த அளவில் சுரக்க ஆரம்பிக்கிறது. காலையில் எழுந்தபின், அப்படியே கட்டிலில் திரும்பவும் விழுந்து படுக்கலாம் என்று தோன்றினால், அது Melatonin இன் குற்றமே! உடல் சோர்வும் களைப்பும் இரவில் நித்திரைக்கு போகும் போது அற்புதமாக இருக்கும், ஆனால், பல முக்கியமான விடயங்களை முடிக்கவேண்டிய ஒரு வேலை நாள் என்றால், என்ன செய்வது?

ஒளி குறைந்த நாட்களில், மூளை serotonin என்ற ஹோர்மோன் இனையும் குறைவாகவே சுரக்கிறது. Serotonin க்கும் எங்கள் உள உணர்வுகளுக்கும், மற்றும் பசி உணர்வுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. Serotonin குறைபாடு, இனிப்பான மற்றும் ஆரோக்கியமற்ற மாப்பொருட்களில் நாட்டத்தை அதிகரிப்பதால், இருள்காலங்களில் உணவுப்பழக்கங்களும் ஆரோக்கியம் குறைந்ததாக மாறுகிறது. இத்தோடு, உளச் சோர்வும் சேர்ந்தால் மேலும் கடினம் தான். முகில் மூட்டமான நாட்கள் நீண்டுகொண்டு போகும் போது, vitamin D குறைபாடும் ஒரு எதிர்மறையான காரணியாகிறது. Vitamin D யின் முக்கியத்துவம் பல ஆய்வுகளில் தெளிவாகியிருக்கும் ஒன்று. மனிதர்கள் கூடுதலாக இயற்கையோடும், வெளிச்சூழலோடும் வாழ்ந்தவர்கள். இப்பொழுது, எங்கள் கூடுதல் பொழுது நான்கு சுவர்களுக்குள் கழிகிறது. சூரியன் மறைந்துவிடும் போது உடலில் இயல்பாக இருக்கும் Vitamin D அளவும் மறைந்துவிடுகிறது.

மந்தாரமான நாட்களில் ஏற்படும் சோர்வான உணர்வை தடுக்க, Vitamin D எடுக்கலாம் என வைத்தியர்கள் பரிந்துரைக்கிறார்கள். Vitamin D எலும்பு ஆரோக்கியம், மற்றும் இருதய ஆரோக்கியத்தோடு தொடர்புபட்டிருக்கிறது. மற்றும் Type 2 Diabetes, உடல் பருமன், புற்றுநோய், இறப்பு சாத்தியக்கூறுகளோடு Vitamin D குறைபாடு தொடர்புபட்டிருக்கிறது. அத்தோடு Vitamin D மூளை தொழிற்பாட்டையும் sertonin சுரப்பினையும் சீர்செய்கிறது. வைத்தியர் பரிந்துரை இல்லாமலேயே, Melatonin வாங்கி பாவிக்கமுடியும் என வைத்தியர்கள் கருதுகிறார்கள். இரவு நித்திரைக்கு முன் melatonin எடுப்பது எம் உடல்-கடிகாரத்தை சீர்செய்ய உதவலாம்.

சிலரில், ஒளி குறைந்த நாட்களில் ஏற்படும் உளசோர்வு ஒரு நோய்-நிலையாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. Seasonal Affective Disorder [SAD] எனும் இந்த நோய்-நிலையால் கிட்டத்தட்ட 5% அமெரிக்கர்கள், வருடத்தின் 40% காலம் வருந்துவதாக 2012 இல் வெளியான American Academy of Family Physicians கட்டுரை ஒன்று தெரிவிக்கிறது. குறிப்பிட்ட மாதங்களோ, பருவக்காலங்களோ என்றில்லாமல், சூரிய ஒளி குறைந்த மாதங்களில், ஏன் புரட்டாதி மாதத்தில் கூட இந்த நிலை சிலரை தாக்குகிறது.

SAD இருப்பவர்கள், light therapy மூலம் உதவி பெறுகிறார்கள். இந்த சிகிச்சைமுறை எளிமையானது - பிரகாசமான ஒளியின் முன் ஒவ்வொரு காலையும் 20 இலிருந்து 60 நிமிடம் வரை இருக்கவேண்டும். ஒரு முறை, 20 நிமிடம் இந்த சிகிச்சை பெற்றவர்களே, பலனடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒளி குறைவான நாட்கள் உங்கள் மனதை சோர்வடைய செய்கிறதோ இல்லையோ, உங்கள் உற்சாகத்திற்கும் திருப்திக்கும் உதவியாக சில எளிமையான வழிமுறைகளே போதியதாக இருக்கிறது.

தினமும், முடிந்தால் காலை நேரத்தில், ஒரு மணி நேரமாவது, வெளியில் ஒளியில், நேரம் செலவிடுங்கள்.
சமூக தொடர்பாடல்களை பேண முயற்சி செய்யுங்கள்.
உடற்பயிற்சியை தொடர்ந்து பேண முயற்சி செய்யுங்கள்.
இருள் அகன்று சூரியன் தோன்றத்தானே வேண்டும்?





Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund

07ம் பக்கத் தொடர்ச்சி

# இனி மாற்ற முடியாத மாற்றங்கள்

அதே சமயம் அதனை படம் எடுத்து முகப்புத்தகத்தில் போட்டும் விடுவார்கள். கேட்டால் மற்றவர்களும் செய்ய இது ஊக்கமளிக்கும் என்பார்கள். பெறுபவர்களது மனநிலை புரியாது. தன் சொந்த தாயாக தந்தையாக அண்ணனாக தங்கையாக அவர்கள் இருப்பின் அப்படி போடுவார்களா? இது கேள்வியோடு மட்டும் நிற்கப்போகும் வினா மட்டுமே.

ஆனால் இன்று சமூகத்தில் பெரும்பான்மையான மக்கள் இதனைச் செய்து கொண்டுதான் இருக்கின்றார்கள்.
அதனால் பெரும்பான்மை மக்கள் செய்தால் அது சரியென்ற கணிப்பே இன்று உலகில் உயர்ந்து நிற்கின்றது. எனவே இந்த முகப்புத்தகத்தில் படம்போட்டுக்காட்டும் செயல் தானாக உணர்ந்து மாறினால் அன்றி இனி மாற்றமுடியாத மாற்றமாகிவிட்டது.


புதுவருடக்கொண்டாட்டம்.

இலங்கையில் சித்திரை வருடப்பிறப்பே. அன்று ஆலயங்களுக்கு சென்று மருத்துநீர் வைத்து தோய்ந்து புத்தாடை அணிந்து கோவில் செல்வது வழக்கம். தை முதலாம் திகதி வியாபார ஸ்தாபனங்களுக்கு புதிய கணக்கு எழுதும் மாதமாகவும். பாடசாலைகளில் புதிய வகுப்பில் புகும் நேரமாகவும். இருக்கும். இது தவிர Happy new year சொன்னது கிடையாது.

ஆனால் இன்று தை முதலாம் திகதி (ஜனவரி.01)பிறப்பதற்கு முன்னமே முன்கூட்டியே வாழ்த்துக்கள் பின்பு பிறக்கும் கணத்தில் வாழ்த்துக்கள் பின் காலை ஆலயங்கள் எல்லாம் அர்ச்சனைகள். இதற்கு முக்கியகாரணம். புலம்பெயர் தேசத்தில் சித்திரை புத்தாண்டுக்கு விடுமுறை விடுவதில்லை என்பதேயாகும்.
இங்கும் சித்திரைப் புத்தாண்டுக்கும் தைப்பொங்கலுக்கும் ஆடிப்பிறப்புக்கும் விடுமுறைவிட்டால் கொண்டாட்டம் சிறப்பாக இருக்கும். இதனை முன்மொழியும் நாம் நினைத்தால், அந்த ஒருதினம் விடுமுறை எடுக்கலாம். ஆனால் நாம் எடுக்க மாட்டோம். இங்கு முஸ்லீம் (துருக்கி) சமூகத்தினர் தமது 40 நாள் நோன்பை அரச விடுமுறையின்றியும் சிறப்பாக இங்கு செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் எதற்கும் முதல் எதிர்ப்போம். பின்பு மௌனமாக இருப்போம். பின் எதனை எதிர்த்தோமோ அதனை விமர்சையாகச் செய்வோம். எமக்கு அந்த நேரத்தில் கைகொடுப்பது ஊரொடு ஒத்து வாழ் என்னும் பழமொழியே.
எனவே இனி புதுவருடம் தை முதலாம் திகதி அது மாற்ற முடியாத மாற்றமாகிவிட்டது என்பதே உண்மை.பிறந்தநாள்
பிறந்தநாள் கேக் வெட்டி மெழுகுதிரி கொழுத்தி கொண்டாடுவது எமது மரபு அல்ல. விளக்கை அணைப்பது அபசகுனம். நாம் விளக்கேற்றியே பழக்கப்பட்டவர்கள். ஆனால் இனி அது மாற்றமுடியாத கொண்டாட்ட மாகிவிட்டது.

அடுத்து mother's day, father's day, Lover'sday, இது எல்லாம் நாம் தினம், தினம், கணமும் கொண்டாடியவை ஆனால் இன்று வருடத்தில் ஒரு முறை என்றாகிவிட்டது. முன்பு எல்லாம் இன்று காதலர்தினம் என்று ஒரு பெண்ணுக்கு பூக்கொடுத்தால் அப்ப நேற்றும் நாளையும் என்ன என்பாள். அம்மா இன்று உங்கள் தினம் என்றால் அவள் எந்தத் தினத்தை எதிர்பார்த்துச் செய்தாள். ஆனால் இத்தினங்கள் இனி நாட்டுக்கு நாடு திகதி வேறுபட்டாலும் நடந்தே தீரும். இதனையும் இனி மாற்றமுடியாத மாற்றமாகக்கொள்ளலாம்.



**பிள்ளையின் அன்பும் தாயின் அன்பும்**
**Mother's day**
**அந்த ஒருநாளுக்காக அல்ல!**

உணவு:
எமது பாரம்பரிய உணவுகள் யாவும் மேற்கத்திய நாட்டவர்கள் புதிய

பெயருடன் செய்வதும் அதற்கான காப்புரிமையை பெற்றுதமதாக்கிகொள் வதும் ஒரு புறம் நடக்க.நாம் அவர்களுடைய உணவை நாகரீகமாக நாவுக்கு படைக்கின்றோம். புலம்பெயர் தேசத்தில் நம்மவர்கள் எத்தனைபேர் நமது தாயக உணவை செய்கின்றனர். இத்தாலியரையே மிஞ்சுமளவிற்கு பீட்ஷா கடைவைத்திருக்கின்றோம். இந்த உணவுப்பழக்கமும் இனி மாற்றமுடியாத மாற்றங்களே!
இன்னும் எழுதுவது என்றால் குடும்ப உறவு,காதல்,கல்வி,விழாக்கள், சுயவிளம்பரங்கள், என பல மாற்றமுடியாத மாற்றங்களைத் தாங்கிக்கொண்டு உலாவருகின்றன.

இவையாவும் குற்றப்பத்திரிகையல்ல. நடைமுறையில் உள்ளவற்றை ஏற்றுக்கொண்டு நம்மை நாமே ஏமாற்றாமல் மிகுதிக்காலத்தை கடக்க இது உதவும் என்பதனால் மட்டுமே சொல்லப்பட்டவை.

“மாற்ற முடியாத மாற்றங்கள்” இப்படி இன்னும் ஒரு கட்டுரை இன்று நடப்பவை இன்னும் 10 வருடங்களில் மாறிவிடும்போது வெளிவர வாய்ப்புள்ளது என்பதும் மறுக்கமுடியாத உண்மையே!

03ம் பக்கத் தொடர்ச்சி

## கைவிடப்படும் புதிய அரசியலமைப்பு .....

அரசியலமைப்பு நகல் திட்டம் எதுவும் முன்வைக்கப்படாமல், நிபுணர்குழுவின் யோசனைள் வெளியிடப்பட்டுள்ள நிலையிலேயே இந்தளவு எதிர்ப்புக்கள் இனவாதிகளிடமிருந்து வருகின்றது. முக்கியமான தேர்தல்கள் எதிர்கொள்ளப்படும் நிலையில் ஐதேகவுக்கு இது கடினமான ஒரு நிலையைக் கொடுத்துள்ளது. நிலைமைகளைச் சமாளிப்பதற்கான ஒரு உபாயமாகத்தான் இதனை அரசாங்கத்தின் யோசனைகளாக வெளியிடாமல், நிபுணர்குழுவின் அறிக்கையாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டார்.

அதற்கும் மேலாக அரசியலமைப்பாக்க முயற்சிகளிலிருந்து ஐதேகவும் விலகிக்கொள்ள வேண்டும் என்ற அழுத்தமும் கொடுக்கப்பட்டு வருகின்றது. தேர்தல்கள் நடைபெறவிருக்கும் நிலையில் ஐதேக விஷப் பரீட்சையில் இறங்கக்கூடாது என கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு வலுவடைந்துவருகின்றது. இவை எல்லாவற்றையும் கவனத்திற்கொண்டதான் மகாநாயக்கர்களை சந்திக்க ஐதேக உயர்மட்டக்குழு சென்றது. “இப்போதைக்கு புதிய அரசியலமைப்பு தேவையில்லை” என மகாநாயக்கர் திட்டவட்டமாகக் கூறிவிட்ட நிலையில், ஐதேக அடுத்த காலடியை எடுத்துவைக்கும் என எதிர்பார்க்க முடியாது.
நடைபெறும் அரசியல் நகர்வுகளைப் பார்க்கும் போது இரு விடயங்கள் தெளிவாகத் தெரிகின்றது. முதலாவது, புதிய அரசியலமைப்பாக்க முயற்சிகள் அடுத்த கட்டத்துக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை. இரண்டாவது, அவ்வாறு புதிய அரசியலமைப்பு வந்தாலும் சிறுபான்மையினரைத் திருப்திப்படுத்தும் வகையில் அதில் எதுவும் இருக்கப்போவதில்லை. சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்தக்கூடிய ஒன்றாகவே அது இருக்கும்







# பச்சை குத்துதல் புற்று நோய் வருமா? வேறு பாதிப்புகள் ?

**டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.**
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

பச்சை குத்தினால் தோல் புற்றுநோய் ஏற்படும் என்கின்றார்களே. உண்மையா? பச்சை குத்தினால் புற்றுநோய் வரும் என்பதற்கான தெளிவான திடமான ஆதாரங்கள் எதுவும் இது வரை கண்டறியப்படவில்லை. ஆனால் வரக் கூடும் என்ற சில சந்தேகங்கள் பரவலாக உள்ளன.
பச்சை குத்துவதற்கு பயன்படுத்தப்படும் நிறக் கலவைகளில் பலவிதமான இரசாயனங்கள் கலந்துள்ளன. நிக்கல், குறோமியம், மங்கனீஸ், கோபாலட், டைடேனியம் ஒட்சைட் போன்றவை முக்கியமானவை. (nickel, chromium, manganese, cobalt, or titanium dioxide). இவற்றில் பல நச்சுத்தன்மை வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அந்த இரசாயனங்கள் பச்சை குத்தப்பட்ட இடத்தில் மட்டுப்பட்டு நிற்காமல் அருகில் உள்ள சருமத்திற்கும் நிணநீர்த் தொகுதி ஊடாக நிணநீர்க் கட்டிகளுக்கும் பரந்து சென்று அவற்றை சற்று வீக்கமடையச் செய்வதாக அண்மைய ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இவை நச்சுத்தன்மை வாய்ந்தமை என்பதற்கு அப்பால் நிக்கலும் குரோமியமும் புற்றுநோய்த் தூண்டியாக இருப்பதாக அறியப்பட்டுள்ளது. எனவே பச்சை குத்துபவர்களுக்கு எதிர்காலத்தில் பாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஆனாலும் புற்றுநோய் ஏற்படுவதாக இதுவரை கண்டறியப்படவில்லை.

பச்சை குத்தப்பட்டவர்கள் எந்தவித ஆபத்தும் இன்றி சாதாரணமாக இருப்பதால் அவை பாதுகாப்பானவை என்ற எண்ணம் சாதாரண மக்களிடம் இருக்கிறது. ஆனால் புற்றுநோய் போன்ற பாதிப்புகள் ஏற்பட நீண்ட பல வருடங்கள் எடுக்கும் என்பதால் அவை பற்றி பெரும்பாலும் தெரிய வருவதில்லை.
பச்சை குத்துவது என்பது சருமத்தில் சில அடையாளங்களை அல்லது கோலங்களை அல்லது எழுத்துக்களை வர்ண கலவைகளால் பதிப்பதாகும். சிறிய ஊசிகள்களால் நுண்ணிய அளவு வண்ணக் கலவைகளை மீண்டும் மீண்டும் சருமத்தின் மேற்பகுதியில் குத்துவதால் அவை உள்ளே செல்கின்றன.
இவை நிரந்தரமான அடையாளங்கள் என்பது குறிபிடப்பட வேண்டியதாகும். காலத்தால் அழியாதவை. எனவே அந்நியப் பொருளான அது உடலில் நிரந்தரமாகக் குடிகொள்ளப் போகிறது என்பது கவனத்தில் எடுக்க வேண்டிய விடயம். எந்த அந்நியப் பொருளானாலும் அதற்கு எதிராக உடல் எதிர்வினையாற்றக் கூடும். புற்றுநோய் வருமா இல்லையா என்ற பிரச்சனைக்கு அப்பால் வேறு பல பாதிப்புகள் ஏற்படுவதை மருத்துவர்களாகிய நாம் காண முடிகிறது.

ஒவ்வாமை சரும நோய்கள் மிக முக்கியமானவை. அந்த இடத்தில் சருமத்தில் அரிப்பு எடுப்பது, அழற்சி மற்றும் எக்ஸிமா போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. சிலருக்கு உடனடியாகவே அத்தகைய பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஆனால் வேறு சிலருக்கு பல ஆண்டுகளுக்குப் பின்னரே அவை தோன்றக் கூடும்.

**பச்சை குத்துவதற்கு பயன்படுத்தப்படும் நிறக் கலவைகளில் பல நச்சுத்தன்மை வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.**

பச்சை குத்திய உடங்களில் கிருமித் தொற்று ஏற்பட்டு புண்கள் தோன்றுவதை அதிகம் காண முடிகிறது. இதற்குக் காரணம் பச்சை குத்தும் பணியாளர்கள் தமது கைகளை கழுவுதல் குத்துவதற்கு உபயோகிக்கும் ஊசிகளை கிருமி நீக்கம் செய்யாமை போன்ற சுகாதார நடைமுறைகளை சரியான முறையில் கடைப்பிடிக்காமையே ஆகும். சருமத்தில் கிருமித் தொற்று மட்டுமின்றி பெரிய சீழ் கட்டிகள் வரை ஏற்படுவதுண்டு.

பச்சை குத்திய இடங்களில் தழும்புகள் தோன்றுவது மற்றுமொரு பிரச்சனை. அழகைத் தேடப் போய் அசிங்கத்தில் முடிவதாக இது அமையும். இது எல்லோருக்கும் ஏற்படுவதில்லை. உடலியல் ரீதியாக சிலருக்கு இவை ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம். இருந்தபோதும் ஆழமான பெரிய புண்கள் ஏற்பட்டால் எவருக்கும் தழும்புகள் தோன்றலாம். தழும்புகள் சுலபமாகக் குணப்படுத்த முடியாதவை என்பதால் அவை வராமல் தடுப்பதே உசிதமானது.



சிறிய காயங்கள் முளைகள், சரும அழற்சி போன்றை உள்ள இடங்களில் பச்சை குத்துவது அறவே கூடாது. ஏனெனில் அவை பின்பு புற்றுநோயாக மாறக் கூடிய சாத்தியம் உள்ளது. பச்சை குத்துவதில் உபயோகிக்கும் நிறக் கலமிகள் அதற்கான சாத்தியத்தை அதிகரிக்கும். இவ்வாறாக பல வித பாதிப்புகள் ஏற்படுவதால் பச்சை குத்துவதைத் தவிர்ப்பதே நல்லது.





# காதல்

கௌசி

காதலர் தினம் பெப்ரவரி 14ம் திகதி கொண்டாடப்படுவதன் காரணம் பற்றி சென்ற ஆண்டு கட்டுரையில் நான் விளக்கியிருக்கின்றேன். ஆனால், இந்த காதலர் தினம் கொண்டாடப்படுதல் அவசியமா? என்ற கேள்வியுடன் பல நாடுகள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றார்கள். வியாபார நோக்கத்துடன் காதலர் தினத்தை விலையுயர்ந்த ஒரு விழாவாக மாற்றிவிடுகின்றார்கள் என்றும் இவ்விழா கலாசாரத்தை சீர்குலைக்கின்றது என்றும் பலவாறான எதிர்ப்புகள் நிலவுகின்றன. இந்நிலையில் காதலர் தினத்தின் முக்கியத்துவம் பற்றி சிறிது மனம் பதிப்போம்.

காதல் என்பது உலகத்து உயிர்கள் அத்தனையையும் தன் பிடிக்குள் அடக்கியுள்ளது. உடற்பசி, உள்ளப்பசி, உயிர்ப்பசி, பிறவிப்பசியே காதல் என்பர். அ்.திணைக்காதல் கல்லாக்காமம், இயற்கையின்வீறு. மனிதர்களிடத்தில் தோன்றும் காதல் நினைவில் இனித்து, அறிவில் விளங்கி, கல்வியில் வளர்வது என்று வ.சு.ப. மாணிக்கனார் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார். சங்கநூல்கள் எட்டுத்தொகை பத்துப்பாட்டு மொத்தம் 2381 பாடல்கள். இதில் 1862 பாடல்கள் அகத்திணையையே குறிக்கின்றன. இவ் அகத்திணை வயப்பட்ட காதலை தொல்காப்பியர் களவியல், கற்பியல் என அகத்திணை பற்றிய செய்திகளை இரண்டாகப் பிரிக்கின்றார்.

புலவனுக்கு மதம் எனப்படுவது ஆண்பெண் காதலே. அக்காதல் இலக்கியத்தின் வற்றாத ஊற்றிடங்களுள் ஒன்று. கவிதை எண்ணத்தை உருவாக்கும் சார்புகளுள் ஒன்று. இயற்கை இன்பத்தின்பால் உலகை ஆட்டிப்படைக்கும் காதல் இன்பத்தைக் களிப்பான நாளாகக் கொண்டு விழா எடுப்பதில் தவறில்லை என்றே நினைக்கின்றேன்.

ஆண் பெண் இருபாலாரிடையே வெளிப்படும் காமத்தோடு கூடிய காதல் சங்கம் தொட்டு இன்று வரை பாடல்களின் மூலம் அழகாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. காமம் கடந்த காதல், காமத்தோடு கூடிய காதல் என்னும் போது இயற்கையைக் காதலித்தல், செய்யும் தொழிலைக் காதலித்தல், கற்கும் கல்வியைக் காதலித்தல், தன்னைத்தான் காதலித்தல், வயதான தம்பதியினரின் உச்சம்தொட்ட அன்பின் வெளிப்பாடு என காமம் கடந்த காதல் வெளிப்படுகின்றது. தெய்வீகக் காதல் ஆண்டாள் பாடல்களில் அழகாக எடுத்துக்காட்டப்பட்டு இருக்கின்றது. ஆயினும் அவற்றிலும் கூட காமம் வெளிப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

"குத்து விளக்கெரிய கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்சசயனத்தில் மேலேறி
நற்பிண்ணை கொங்கை மேல் வைத்துக் கிடந்த
மலர் மார்பா வாய்திறவாய் "

என்று திருமாலை நினைத்து ஆண்டாள் பாடுவதாக இப்பாடல் வந்திருக்கின்றது. திருமணத்தை மறுக்கப்பட்ட பெண்களின் குறியீடாகவே பெரியாழ்வாரின் கற்பனைப் பாத்திரப் படைப்பே ஆண்டாளாக இருக்கலாம் என்பது ஆராய்வுக்குறிப்பு. ஆயினும் ஆண்டாள் பாடல்கள் தெய்வீகக் காதலைப் புலப்படுத்தியிருப்பது காணக்கூடியதாக இருக்கின்றது. காதல் அடைதல் இயற்கை. அது கட்டில் அகப்படும் தன்மையதோ என்று பாரதிதாசன் எடுத்துரைக்க, காமம் என்ற சொல் காதலுக்கு பயன்படுத்தப்படுவது அறியக்கிடக்கின்றது.

"காமங் காம மென்ப காமம்
அணங்கும் பிணியு மன்றே நினைப்பின்
முதைச்சுவற் கலித்த முற்றா விளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே"

அக்காமம் என்பது, வருத்தமும் நோயும் அன்று. மேட்டு நிலத்தில் தழைத்த, முதிராத இளைய புல்லை, முதிய பசு, நாவால் தடவி இன்புற்றாற்போல நினைக்குங் காலத்தில் அக்காமம் புதிய இன்பத்தை யுடையதாகும்.
எனக் காமமாவது எமது அறிவு நிலைக்கு உட்பட்டது என குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது.

வெகுளிப்பெண் படத்தில் கண்ணதாசன் காதலாலே போதை வந்தது, காதலால் கவிதை வந்தது, ஆதலாலே காதல் செய்வது, ஆணும் பெண்ணும் ஆசை கொள்வது" என்று எழுதியிருக்கின்றார். வைரமுத்து "உலகமெல்லாம் ஒரு சொல். ஒரு சொல்லில் உலகம். காதல் கற்காலம் தொடங்கி இன்றநெற் வரையில் அன்றும் இன்றும் என்றென்று காதல், காதலித்துப் பார் உன்னைச் சுற்றி ஒளிவட்டம் தோன்றும், வயிற்றுக்கும் தொண்டைக்குமாய் உருவமில்லா உருண்டையொன்று உருளக் காண்பாய்... காதலின் திரைச்சீலையைக் காமம் கிழிக்கும்... செத்துக் கொண்டே வாழவும் முடியுமே... அதற்காக வேணும்... காதலித்துப் பார்! என்றார்.

காதல் பற்றி மகாகாவி பாரதியார் சொல்கின்றபோது தனது குயில்பாட்டிலே
"காதல் காதல் காதல்
காதல் காதல்போயிற் காதல்போயிற்
சாதல் சாதல் சாதல்" என்றார்.

இவ்வாறான காதல் ஆண்பெண் இருபாலாரிடையே தோன்றும் போது செம்மண்ணில் மழைநீர் சேர்கின்றபோது, அந்நீரும் செந்நீராவது போல் இரண்டறக்கலக்கும் எனக் குறுந்தொகையில்
"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
நீயும் யானும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சந்தாங் கலந்தனவே"

செம்புலப்பெயல் நீரார் பாடியிருக்கின்றார்.
இதனையே பாரதியும் கண்ணம்மா என் காதலியில்

"அன்னிய மாகநம்முள் எண்ணுவதில்லை - இரண்
டாவியுமொன் றாகுமெனக் கொண்டதில்லையோ? என்கிறார்.

வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கம், செப்பல்(தனக்குள் பேசிக்கொள்ளல்) நாணு வரை இறத்தல்(வெட்கம் இல்லாமல் போதல்) நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு (காதல் கைகூடாவிடத்து சாக நினைத்தல்) என தொல்காப்பியர் பொருளதிகாரத்திலே களவொழுக்கம் பற்றி அழகாக எடுத்துக்காட்டுகின்றார்.

தொடர்ச்சி 28 பக்கம்







# எண்ணங்களே விதியாகும்

# எண்ணங்களில் கவனமாயிருங்கள்!!



கரிணி



" எண்ணம் போல் வாழ்க்கை" "மனம் கொண்டதே மாளிகை" என்று பலவாறு வாழ்வினுடைய தொடக்கத்தை எண்ணங்களிலிருந்தே புள்ளி வைத்து ஆரம்பித்துச் செல்வதாகக் கூறியிருக்கிறார்கள்.

மனம் என்பது என்ன? அது எங்கே இருக்கிறது? அது எவ்வளவு ஆற்றல் மிக்கது? என்று பார்த்தால் மனம் என்பது அனுபவங்களின் திரட்டலால் உருவானதே. குழந்தை கருவிலேயே சில அனுபவங்களைப் பெற்றுவிடும். தாயினுடைய இதயத் துடிப்பு, உடலின் கதகதப்பு, தாய் பேசும்போது ஏற்படும் அதிர்வுகள் போன்றன. பிறந்தவுடன் சூழலில் கிடைக்கின்ற விபரங்களை வைத்து மனமானது விரிவடைகிறது. தகவல்கள் அதிகரிக்கின்றன.

எண்ணங்களுக்கு ஆற்றல் இருப்பதை பண்டைக்காலமே சித்தர்கள் மரபுவழியாக ஆணித்தரமாக கூறிவந்தனர். இன்று நவீன யுகமும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளது. எண்ணங்களின் அதிர்வலைகளை கொண்டே அந்த எண்ணங்களுக்கு உரியவரின் சக்தி வளையம் ( Aura ) உருவாகிறது. அத்தோடு மட்டுமன்றி அது உடலிலும், மனதிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. நேர்மறை எண்ணங்கள் உடையவர்களுடைய சக்தி வளையம் மிக ஆற்றல் வாய்ந்ததாகவும், ஒரு அடி தொடக்கம் பல தூரம் வரை பரந்திருக்கும் என கூறப்படுகின்றது. அவரவர் எண்ண வலிமைகளுக்கு ஏற்ப அவை உருவாகியிருக்கும். மகான்களுடைய சக்தி ஆற்றல் அந்த சூழல் அனைத்துக்குமே நன்மை பயக்கக் கூடியது. சக்தி வளையத்தை ( Aura ) படம்பிடிக்கும் நவீன கமரா கூட இன்று உள்ளது.


சரி இந்த நேர்மறை, மற்றும் எதிர் மறை எண்ணங்களால் என்ன விளைவு ஏற்படுகின்றது என பார்ப்போம்.

"விதி " என்ற சொல் தொன்று தொட்டே புழக்கத்தில் இருந்து வருகிறது. இந்த விதியை வடிவமைப்பவர் யார்? எவ்வாறு இந்த விதி நல்தாகவோ அல்லது அதற்கு நேர்மாறாகவோ உருவாகிறது எனப் பார்த்தால். அதற்கு மூல காரண கர்த்தாவாக இருப்பது அவரவர் எண்ணங்களே. இதனை "ஈர்ப்பு விதி" என்று கூறலாம். எண்ணமானது எதை அதிகம் விரும்புகின்றதோ அல்லது வெறுக்கின்றதோ அந்த எண்ணம் மீண்டும் மீண்டும் உதயமாகும் போது அந்த எண்ணத்தில் சக்தி குவிகிறது. சக்தி இங்கே எங்கே வந்தது என்று கேள்வி வரலாம். எல்லா விடயங்களும் பிரபஞ்ச சக்தியால் இயங்கிக் கொண்டே இருக்கிறது. அதற்கு விஞ்ஞான பெயர் கொடுத்தாலோ இல்லை மெஞ்ஞானப் பெயர் கொடுத்தாலோ அது தன்னிலையில் மாற்றம் கொள்வதில்லை. இந்த நிலையில் எண்ணங்களின் ஆற்றலுக்கு ஏற்ப எதை நாம் அதிகம் சிந்திக்கின்றோமோ அதை நோக்கி நகர்த்தப்படுகிறோம்.

அந்த விடயங்களும் எம்மை நோக்கி ஈர்க்கப் படுகின்றது. இந்த ஈர்ப்பு விதி மட்டுமே என்றும் மாறாமல் உள்ளது. இதற்கு நல்ல விதி , கேடு கெட்ட விதி என்ற பாகுபாடு இல்லை. எந்த எண்ணத்தை அதிகம் அழுத்தம் கொடுக்கிறீர்களோ அது எதிர்கால விதியாக உங்கள் முன் தோற்றம் பெறப் போகிறது.

நேர்மறை எண்ணங்கள் அதிகம் நிறைந்தவருடைய சக்தி அதிர்வுகள் எதிர்மறை எண்ணங்கள் உடையோர்களை விட முற்றிலும் மாறுபட்டது. இந்த சக்தி அதிர்வுகள் இரண்டுமே அவரவர்க்கும் அவர்களை சுற்றியுள்ள சூழலுக்கும் அதன் தன்மைக்கு ஏற்ப தாக்கத்தை ஏற்படுத்தும். அதீத நேர்மறை ஆற்றல் எதிர்மறை ஆற்றலை சீராக்கி தன் ஆற்றலால் நிறைக்கும். அது போலவே எதிர்மறை ஆற்றலும் செயற்படும். எனவேதான் மகான்களையும், நேர்மறை ஆற்றல்கள் நிறைந்த பகுதிகளையும் தேடிச் சென்று தமது ஆற்றலை சீர்படுத்தும் நோக்கில் பலர் தெரிந்தோ தெரியாமலோ அனுகூலமடைகின்றனர் இதில் காவி கட்டினால் மட்டுமே மகான்கள் என்ற பொருள் கொள்ள வேண்டாம். சின்னஞ்சிறு பாலகன் கூட அதீத நேர்மறை ஆற்றலால் நிறைந்திருக்கும் வாய்ப்புக்கள் உண்டு. சிலர் வீட்டிற்கு சென்று வந்தாலே ஏதோ ஒரு புத்துணர்வு பெருகும் .






சிலர் எப்போதும் சோகம் விரும்பிகளாகவே காணப்படுபவர். இன்னும் சிலர் தமக்கு எப்போதும் ஏதாவது இடையூறு வருவதாகவே நம்பிக்கை கொண்டிருப்பார்கள். தனக்கு மட்டுமே இப்படி நடக்கிறது என எண்ணுபவர்களும் உண்டு. இதுதான் மிகவும் ஆபத்தானது. அவர்கள் வடிவமைப்பது எதிர்கால விதி என்பதை மறந்து ஏற்பட்ட சோகங்களை மீட்டு மீட்டு சுகம் பெறுவர். இதனையே அவர்கள் ஈர்த்துக் கொள்வதால் மீண்டும் அதே நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டிய தருணம் அமைந்து விடுகிறது. நம்பிக்கை என்ற புள்ளிக்கு இன்னும் ஆற்றல் அதிகம் என்பதை மறந்துவிட வேண்டாம். எனவேதான் இப்படியானோர்கள் வாழ்வில் தொடர் சோகங்கள் சம்பவிப்பதை காண முடிகிறது.

தொடர்ச்சி 14 பக்கம்



அனைவருக்கும் எங்கள் காதலர் தின நல் வாழ்த்துக்கள் / Feb14

13 ம் பக்கத் தொடர்ச்சி

# ” எண்ணம் போல் வாழ்க்கை”




அப்படியானால் இவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ள தீர்வே இல்லையா? ஏற்கனவே ஏக்கர் கணக்கில் எண்ணிவிட்ட எதிர்மறை சிந்தனைகளை என்ன செய்வது என்று பதற்றப்படத் தேவையில்லை. தீர்வுகளை வைத்துக் கொண்டுதான் பிரச்சனைகள் உருப்பெற்றன. ஒரே வழி தான் இப்போது உள்ள எண்ணத்தை நேர்மறையாக மாற்றி விடுவதே வழி. அதாவது எந்நிலையில் இருந்தாலும் அந்நிலையை தளர்வான மனதோடு ஏற்றுக் கொண்டு எது நடந்தால் எங்களுக்கு பிடிக்குமோ அது நடப்பதாகவே எண்ணிக் கொண்டால் அதை நோக்கி நாம் நகர்வது மட்டுமன்றி அந்த விடயமும் எம்மை நோக்கி ஈர்க்கப்படத் தொடங்கி விடும். இதனையே எண்ணம் போல் வாழ்க்கை என்றனர். நேர்மறை நம்பிக்கை வளர்த்து கொடிய நோயிலிருந்து மீண்டவர்களும் உண்டு. எண்ணங்களுக்கு ஏற்பவே உடலில் இரசாயன மாற்றங்கள் உருவாகி உடல் தன்னை தொழிற்பட வைக்கிறது. உதாரணமாக மாங்காயோ புளியம்பழத்தையோ உண்டு பார்த்தவர்கள் அது இல்லாத போதும் கூட அதைப்பற்றி நினைக்கும் போது அதனை உண்மையிலேயே உட்கிரகித்துக் கொள்வதற்காக உமிழ்நீர் சுரப்பதில்லையா அதுபோல. சம்பவம் இல்லாவிட்டாலும். எண்ணத்தால் தாக்கம் இடம்பெறும். உணர்ச்சி மிக்க சந்தோசத்தினால் அதிகப்படியான நேர்மறை ஆற்றல்களைப் பெற முடியும். காரணமல்லாத விடயங்களையும் கொண்டாட்டமாக மாற்றுவதால்த்தான் குழந்தைகளால் அவ்வளவு மலர்ச்சியாக இருக்க முடிகிறது. எனவே வாழ்வில் எங்கெல்லாம் மகிழ்ச்சி பொங்க முடிகிறதோ அப்போதெல்லாம் புத்துணர்வு கிடைக்கப்பெறும்.

எந்நேரமும் கலகலப்பாகவே இருக்கும் நபர் கெட்டவராக இருப்பினும் கூட என்றும் அதே கலகலப்போடு வாழ்வதையும் காண்கிறோம். அதே மிக்க நல்ல மனிதர் எப்போதும் இருண்ட வாழ்வோடு போராடுவதையும் காண்கிறோம். இங்குதான் சிந்திக்க வேண்டும். விதியானது நல்வினை தீவினையை விட எண்ணங்களின் ஈர்ப்புக்கு ஏற்பவே வடிவமைக்கப்படுகிறது. நல்வினையில் ஏற்படும் ஆன்ம திருப்தியும், தீவினையால் ஏற்படும் குற்ற உணர்வும் எண்ணத்தில் தாக்கம் புரிந்து தான் விதியை வடிவமைக்கின்றன. நல்வினையால் எண்ணத்தில் எந்த மாற்றமும் உருவாகாமலும், செய்த தீவினையால் எந்த குற்ற உணர்வுமே எண்ணிக்கொள்ள முடியாதவர்களுடைய விதியை இந்த எண்ண ஆற்றல் சென்று சேர்வது மிகவும் குறைவாகவே உள்ளது எனலாம். குற்றம் புரிந்தவர்களோ அல்லது எதிர்மறை சிந்தனை நிறைந்தவர்களோ தமது வாழ்வை மகிழ்வாக நேர்மறையாக மாற்ற வேண்டுமெனில் முதலில் செய்ய வேண்டியது குற்ற உணர்வை எண்ணத்திலிருந்து அகற்ற வேண்டும். ஏனெனில் அந்த குற்ற உணர்வே மோசமான விதியை உருவாக்கித் தந்துவிடும். எனவே குற்ற உணர்வை நீக்கி நேர்மறையான சிந்தனையில் எண்ணத்தை செலுத்தி செயற்படும் போது அவை வாழ்வில் விரும்பிய மாற்றங்களின் சம்பவங்களோடு முன் வந்து நிற்கும்.

இதுவே எண்ணங்களின் ஈர்ப்பு விதியோடு கூடிய நாமே வகுத்த எமக்கான தலைவிதி.

அப்படியானால் எமக்கு அப்பாற்பட்ட சக்தி என்ற ஒன்றும் இல்லையா? என்ற கேள்விக்கு உண்டு என்பதே பதில் . இவை எல்லாம் எப்படி உருவாக்கப்பட ஒரு சக்தி தொழிற்படுகிறதோ அதுவே அந்த பிரபஞ்ச சக்தி. உங்களுக்கு விரும்பிய பெயரை நீங்கள் சூட்டிக் கொள்வதில் அச்சக்திக்கு ஆட்சேபனை ஏதுமில்லை.

# சம்பவத் துணுக்கு : திக்குவல கமால்



## விருந்துக்குச் சென்ற மேதை

விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன் விருந்துபசாரமொன்றுக்கு சென்றிருந்தார்.அவரோடு மனைவி செல்லவில்லை.

விருந்து முடிந்து வந்த்தும்,மிக்க ஆவலோடு அதுபற்றி விசாரித்தாள் மனைவி.

வந்திருந்த விஞ்ஞான மேதைகள் பற்றி புகழ்ந்து பேச ஆரம்பித்தார் ஐன்ஸ்டீன்.

” அது கிடக்கட்டும்.வந்திருந்த பெண்மணிகளின் ஆடையணிகள் எப்படி இருந்த்தென்று முதலில் சொல்லுங்களன்”- என்று குறுக்கிட்டாள் மனைவி.

” பெண்மணிகள் என்னென்ன விதமான ஆடையணிகளோடு வந்திருந்தார்களென்று நான் அவதானிக்கவில்லை.

சாப்பாட்டு மேசைக்கு மேலே தெரிந்த பாகத்தில் அப்படி ஆடை எதுவும் அணிந்திருந்த்தாகத் தெரியவில்லை. மேசைக்கு கீழே பார்ப்பது மரியாதை இல்லை அல்லவா? அதனால் நான் பார்க்கவில்லை”- என்று பதில் சொன்னார் ஐன்ஸ்டீன்.



# ஓய்வுபெற சிறந்த வயது எது ?

- ஜயந்தன்






## தாமதமான ஓய்வு ஆயுளைக் குறைக்கும்

ஆயுள் எதிர்பார்ப்பு (life expectancy) மற்றும் ஓய்வு வயது (retirement age) அதாவது (ஓய்வு பெற்ற வயது Vs ஆயுட்காலம்) ஆகியவற்றிற்கும் இடையிலான உறவு பற்றிய ஒரு ஆய்வை முன்னணி அமெரிக்க அறிஞர் டொக்டர் எ.ஃப்ரெம் செங் (Dr. Ephrem Cheng ) செய்திருந்தார். போயிங், AT & T மற்றும் /போர்டு (FORD ) மோட்டார் கம்பனி உள்ளிட்ட அமெரிக்க சூப்பர்மாதிரி குழுக்களுக்கான பல ஓய்வூதியத் திட்டங்களை இந்த அறிக்கை வெளியிட்டது, மேலும் நிர்வாகி எவ்வளவு தாமதமாக ஓய்வு பெறுகிறாரோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவரது ஆயுள் குறுகியதாக அமையும் புள்ளி விவரங்கள் பின்வருமாறு:

| ஓய்வூதிய வயது , | இறக்கும் போது வயது |
| --- | --- |
| 49.9 | 86 |
| 51.2 | 85.3 |
| 52.5 | 84.6 |
| 53.8 | 83.9 |
| 55.1 | 83.2 |
| 56.4 | 82.5 |
| 57.2 | 81.4 |
| 58.3 | 80 |
| 59.2 | 78.5 |
| 60.1 | 76.8 |
| 61 | 74.5 |
| 62.1 | 71.8 |
| 63.1 | 69.3 |
| 64.1 | 67.9 |
| 65.2 | 66.8 |




அறுபத்து ஐந்து வயதில் ஓய்வெடுக்கும் முழுநேர மேலாளர்கள் பொதுவாக 18 மாதங்களுக்குள் இறக்கிறார்கள் என்பதில் கிட்டத்தட்ட எல்லா பெரிய நிறுவனங்களும் உடன்படுகின்றன , இதன் விளைவாக, பல ஓய்வூதிய இருப்புக்கள் கோரப்படவில்லை. டாக்டர் செங் பின்னர் ஒரு விரிவான ஆய்வின் பின் மேலே குறிப்பிட்ட புள்ளிவிவரங்கள் மூலம் நீங்கள் எவ்வளவு தாமதமாக ஓய்வு பெறுகிறீர்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு குறுகிய காலத்தில் இறந்து விடுவீர்கள் என்று முடிவுக்கு வந்தார்.

முழுநேர மேலாளர்கள் தினமும் மகத்தான அழுத்தத்தை எதிர் கொள்கிறார்கள், தொடர்ந்து உணர்ச்சி ரீதியிலான பதட்டத்தில் வாழ்கிறார்கள், ஆனால் அதைப் கெட்டியாக பிடித்துக் கொள்ள வேண்டும், அதனால் சரிவின் விளிம்பிற்கு தங்களை தாங்களே தள்ளிவிடுவது எளிது. இந்த மன மற்றும் மனநிலையானது உடலின் உறுப்புகள் மற்றும் செல்களை சேதப்படுத்தி, நீண்டகால உயர் அழுத்த நிலையை உருவாக்குகிறது. உங்களுக்குத் தெரிவதற்கு முன்பாகவே, உங்கள் ஆரோக்கியம் குறைக்கப்பட்டு விடும். இவ்வாறு, அறுபத்து ஐந்து வயதில், மூத்த நிர்வாகி ஓய்வு பெற்றபோது, அவரது மறைந்திருந்த (latent ) நோய்களிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார், ஆனால் பதினெட்டு மாதங்களுக்குள் அவர் போய்விட்டார்.

இக்கண்டுபிடிப்புகள் அமெரிக்க நிர்வாகிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன, எனவே அவர்கள் 50 வயதில் ஓய்வு பெற்றால் அவர்கள் வாழ்க்கை நன்கு அமையும் என்று கூறுகிறார்கள், இவ்வாறு ஓய்வு பெற்றவர்கள் முற்றிலும் வேலையில் இல்லாமல் இல்லை. அவர்கள் வாழ்க்கையை மீண்டும் திட்டமிட்டு, வாழ்ந்துகொண்டு, ஓய்வெடுப்பதுடன், பகுதி நேர மற்றும் சுவாரஸ்யமான வேலைகளை மட்டுமே எடுத்துக் கொண்டு செய்ய வேண்டும்.
ஆனால் அதிகாரத்தையும் ஆடம்பரத்தையும் நோக்கி செல்வதை நிறுத்தவேண்டும். இந்த ஆய்வின் படி, இந்த 50 வயதினர்களின் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட சரிவு , அவர்களின் இரண்டாவது வசந்த காலம் தொடங்கிய பின்னர் பெரிதும் மேம்பட்டது. அவர்களில் அநேகர் 85 வயதாக இருக்கும் வரை சொர்க்கத்துக்கு செல்லவில்லை. ஆய்வின் படி, 50 வயதான ஓய்வுபெற்ற குழுவினர் தங்கள் உடல்நலம் மேம்பட்டதை கண்டனர் .
டொக்டர் செங், ““சீக்கிரம் நீங்கள் சக்தி மற்றும் பணம் என்ற வட்டத்தை விட்டு வெளியேறி, புகழ் மற்றும் ஆடம்பரத்தின் விலங்கை அகற்றிவிட்டால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள், நீண்டகாலம் ஒரு அடிப்படை வாழ்க்கையை வாழ முடியும்.““ என்று கூறுகிறார்.
மனிதாபிமானமுள்ளவராக தாராள சிந்தையுடன் வேலை செய்வது, அர்த்தமுள்ள முறையில் வாழ்வதான உணர்வைக் கொடுக்கும், இதன் விளைவாக, நோயெதிர்ப்பு தன்மை வலுப்பெற்று, ஆயுட் காலம் நீடித்தது. அது சரி நீங்கள் எத்தனை வயதில் ஓய்வு பெறுவதாக இருக்கிறீர்கள்?
(ஓய்வு உயர்பதவிகளில் பெரும் பொறுப்புக்களில் உள்ளவர்களை மையமாகவைத்து எடுக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது).

## நன்றி நவிலல்

### அமரர் திருமதி வனிதாமணி பூபாலன்

தோற்றம் 01-06-1932 - மறைவு 06-01-2019



அமரர் திருமதி வனிதாமணி பூபாலன்

யேர்மனியில் எம்முடன் நீண்டகாலம் வாழ்ந்து
இறைவனடி சேர்ந்த கரம்பொன் மேற்கைச்
சேர்ந்த, எம் அன்புத்தெய்வம்
அமரர் வனிதாமணி பூபாலன் அவர்களின்
மறைவு கேட்டு, உடன் வந்து ஆறுதல் கூறிய
அனைவருக்கும்,தொலைபேசிமூலம் அனுதாபம்
தெரிவித்த அன்பர்களுக்கும், மலர்அஞ்சலி
செலுத்தியவர்களுக்கும்,
இன்னும் பல வழிகளிலும் உதவியவர்களுக்கும்

எங்கள் இதயங்கனிந்த நன்றியதனைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி இங்ஙனம்
பிள்ளைகள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள்




வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
ஆங்கிலம்,யோ்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளோம்
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de




அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த காதலர்தின வாழ்த்துக்கள் Feb.14

# ஏமாற்றம்




என்ன நண்பர்களே? இச் சொல்லினைக் கேட்டாலே உங்கள் அனைவரின் மனதில் ஏதோ ஒரு விடயம் ஞாபகத்துக்கு வருகின்றதல்லவா? ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். ஏமாந்து போனவர்களில் நீங்களும் ஒருவராக இருக்கின்றீர்களா? இல்லை என்று கூறமுடியாது அல்லவா!

மனிதனின் வாழ்க்கையில் ஏமாற்றம் என்பது வந்து வந்து போகின்றது. ஏன், எதற்காக ஏமாற்றம் என்பது நிகழ்ந்து வருகின்றது? மனிதன் என்பவன் எல்லாவற்றிலும் எதிர்பார்ப்பதினால் அவனுக்கு ஏமாற்றம் ஏற்படுகின்றது. ஆனால் எதிர்பார்ப்பு இல்லாவிடின் வாழமுடியுமா?
எது இலகுவான விடயம்? எதுவும் எதிர்பார்க்காமல் வாழ்வதா அல்லது ஏமாந்துபோவதா?

இறைவனிடம் கேட்டது கிடைக்கவில்லை என்றால் ஏமாற்றம். பிள்ளைகள் தங்கள் கடமையிலிருந்து தவறினால் ஏமாற்றம். வேலைவாய்ப்பு சரியாக அமையவில்லை என்றால் ஏமாற்றம். கல்வியில் பட்டம் பெறவில்லையென்றால் ஏமாற்றம். பணம் வாங்கி திரும்பி கொடுக்காவிடின் ஏமாற்றம். நண்பர்கள் உண்மையாக இருக்க முடியவில்லை என்றால் ஏமாற்றம். காதல் கைகூடவில்லை என்றால் ஏமாற்றம். மற்றும் திருமணங்களிலும் ஏமாற்றம். அன்பு, பாசம், காதல், விருப்பு, நன்றி, நம்பிக்கை அனைத்தும் அழகியவை. ஆனால் ஏமாற்றம் என்பது வந்து இவையனைத்தையும் அழித்து விடுகிறது.
இவ்வுணர்வுகளை அழித்தபின் இவ்வேதனைகளைத் தாங்கும் வலிமை எல்லோருக்கும் இருக்காதல்லவா! மன அழுத்தம் ஏற்பட்டு துன்பநிலைக்குள் உள்ளாகிவிடுகிறார்கள். கோபம், சண்டை, பொறாமை மற்றும் வெறுப்பு போன்ற தீய எண்ணங்கள் ஏற்படுகின்றன. ஏன்? நம்பிக்கைகள் கொடுத்து நம்பவைத்ததனாலேயா!?

பெற்றோர்களுக்கு சிறுவயதில் பிள்ளைகள் கூறியிருப்பார்கள், நாங்கள் இருக்கிறோம் என்று. அதேபோல் வளர்ந்த பின்னும் நாம் பெற்றோரைக் கவனிக்க வேண்டும் ஏமாற்றிவிடக்கூடாது. கல்வி,வேலை. நம் சொந்தக்காலில் நிற்பதற்கும் மற்றவர்களை நம்பி ஏமாறாது இருப்பதற்கும், இவ்விரண்டும் அவசியமானவை.

காதலிக்கும் போது கூறிய விடயங்கள் அனைத்தும் திருமணம் செய்தபின்னும் கடைப்பிடித்தால் தான் திருமண வாழ்க்கையும் நன்றாக அமையும். அதேபோல் பெரியவர்களால் நிச்சயிக்கப்படும் திருமணங்களை ஏமாற்றியோ அல்லது பொய்கள் கூறியோ செய்துவைத்தும் வாழ்க்கையினை அழித்துவிடாதீர்கள்.
காதல்! காதல் இல்லாமல் இவ்வுலகில் யார்? ஆணோ பெண்ணோ மற்றவர் மீது உள்ள காதலினாலும் நம்பிக்கையினாலும் எங்கோ பிறந்த இருவர் ஒன்று சேருகின்றனர். ஒருவர்மீது ஒருவர் வைத்திருக்கும் அன்பு ஆழமானது. அவ்வன்பு உள்ளவர்களை நாம் ஏமாற்றி விடலாமா? நம்பிக்கை கொடுத்தால் இறுதி வரை காக்கவேண்டும். தவறுகள் செய்வது மனித இயல்பு. இவற்றை சரி செய்து திரித்திக் கொண்டு ஒருவர்மீது ஒருவர் அன்பு காட்ட வேண்டும். நடுபாதையில் விட்டுச் செல்வதல்ல காதல்! தன்னைவிட தான் விரும்புவரை அதிகமாக நேசிப்பவர் ஏமாற்ற மாட்டார். சுயநலமாகச் சிந்திப்பவர் ஏமாற்றிவிடுவார். உண்மையாகக் காதலிப்பவர் ஒருநாளும் ஏமாற்ற மாட்டார்கள்.
காதல் என்றாலே! அது உண்மையின் வடிவமே! ஆனால் அது இன்று உண்மைக் காதல் பொய்க் காதல் என சொல்லும்படியாயிற்று. ஏமாற்றப் பட்டவர்களின் கவலை தாங்கிக்கொள்ளமுடியாதது. அதனாலே சிலர் தற்கொலை செய்துகொள்கின்றனர். காதல் என்பது புனிதமானது. காதலில் தோல்வி அடைந்தவர்களுக்கு: நீங்கள் காதலுக்கு மரியாதை கொடுப்பவர்கள், அதனால் கவலைப் படாதீர்கள்! எவரையும் ஏமாற்றாத உங்கள் தூய காதல் ஏதோ ஒருவழியில் உங்களை சிறப்பாக வாழவைக்கும்.

ஒரு திரைப்படம் பார்க்கப்போகும் பொழுது எவ்வளவோ எதிர்பார்ப்புடன் செல்கின்றோம். நம் வாழ்க்கைமீது அதனைவிட அதிகமான எதிர்பார்ப்பு இருக்காதா?
நாம் ஏதோ ஒரு வகையில் ஏமாந்திருப்போம், அதேபோல் நாம் யாரையாவது ஏமாற்றியிருப்போமா? சின்ன சின்ன பொய்கள் கூறி? அப்படி செய்திருந்தால் அடுத்த நிமிடமே அவர்களிடம் மன்னிப்புக் கேட்டால் எப்படி இருக்கும்? கோபம் உள்ளவர்கள் கூட மன்னித்து விடுவார்கள். நாம் இவ்வுலகில் எதை விட்டுச் செல்லப் போகிறோம்? நம் நினைவுகளை மட்டுமே!
ஏமாற்றம் என்ற சொல்லில் "ஏ" என்ற எழுத்தினை அகற்றினால் வரும் சொல் மாற்றம். இந்த மாற்றம் வாழ்வில் பல வடிவங்களில் வந்ததும். மனிதன் அதற்கு அடிமையாகி பலரை ஏமாற்றி விடுகின்றான். ஆனால் ஏமாந்தவர்கள் தங்கள் தன்னம்பிக்கையுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். வாழ்க்கை யைக் காதலியுங்கள், வாழ்வை வண்ணமாக்குங்கள்.
**ஏமாற்றவும் கூடாது, ஏமாறவும் கூடாது. தடுமாற்றம் கூடவே கூடாது.**





as products are available in Star impex
எமது நிறுவனத்தில்
இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
Star Impex
Asia & Afro Großhandel
Franziusstrasse 150(Tor 3) - 44147 Dortmund Germany
e.mail:info@star-impex.de Tel: 0231 860 26 96


அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த காதலர்தின வாழ்த்துக்கள் Feb.14



# நெடுந்தீவு முகிலனின்
## குறுங் கவிதைகள்

வலியை கவலையை வேதனையை
தனிமைக்கு மட்டுமே சொல்லி அழுங்கள்
மனிதர்களை போல் அது - அதை
யாருக்கும் சொல்லி சிரிக்காது.

பேசுபவற்றை தவறாக புரிந்து கொள்பவரிடம்
மௌனமாய் இருங்கள்.
தவறாக பேசுவதற்காகவே வாயைத்
திறப்பவர்களிடம் விலகியே இருங்கள்.

பிடித்தவர் என்பதற்காக
பிழைகளை சுட்டிக்காட்ட தவறாதீர்கள்
பிடிக்காதவர் என்பதற்காக
நல்லவற்றை தவறாக பரப்பாதீர்கள்

கோபப்படுவது உண்மையான அன்பு
அதற்காக பிரிவது என்றால் - அது
விலகுவதற்கான முன் எற்பாடு..!



விலகியிருக்க விரும்புபவரிடம்
அன்பை திணிக்காதீர்கள் - தற்சமயம் அதை
அவர் வேறொருவரிடம் எதிர்பார்க்கிறார்.

எதிர் பார்ப்புகள் ஒரு போதும்
ஏமாற்றம் தராது - எவரிடம் எதிர் பார்க்க
வேண்டும் என்பதில் தான் ஏமாந்து விடுகின்றோம்.

அன்பு நிரந்தரமானதாக இருக்க வேண்டும்
இல்லை என்றால் அடிக்கடி பிரிவு ஏற்ப்படும்.
பிரிவு என்றாலும் நிரந்தரமானதாக இருக்க வேண்டும்
சேர்ந்த பிறகும் விலகிப்போவது பழகிவிடும்.

சந்தோசம் என்பது
மற்றவர்கள் முன் சிரிப்பது அல்ல..!
தனிமையில் அழாமல் இருப்பது.




# மொழிபெயர்ப்புச் சேவை!
**V.Ramakrishnan**

உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.

**A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst**
**Für alle weltsprachen**

Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888

Lise-Meitner-Str.20
45144 Essen



# மணமகன் தேவை!

இந்துமதத்தைச் சேர்ந்த யேர்மனியில் பிறந்து யேர்மனியில் படித்து யேர்மனியில் (Doctor) டாக்டராகக் கடமையாற்றும் 31 வயதுடைய அழகிய பெண்ணிற்கு மணமகன் யேர்மனியில் தேவை. சுவிஸ் லண்டனைச் சேர்ந்தவர்கள் யேர்மனியில் வந்து வசிப்பவர்களானால் தொடர்பு கொள்ளவும்.
பெற்றோர் சுளிபுரம் பண்ணாகத்தைச் சேர்ந்தவர்களாவர்.
தொடர்புகளுக்கு :

**0049 4211 6981 499 - 0152 175 405 80**



# Thushi -Deko




**Tel:02305 - 85945 - 0176 608 108 13**
Thushiyanthan.Thiruselvam

உங்கள் தெரிவுகள் அனைத்தும்
எங்கள் கையிருப்பில்.....




**Christal mandapa**
**Set round**
**Rada Krishna Stage**
**and**
**Raja Gopuram**



SALE

Gopara Gnanam

ESTD 1992

bollywood und tollywood

# 1/2/ March.2019

இருதினங்கள் மட்டுமே

**திருமண ஆடைகளின் சிறப்புத் தேர்வு**


DHOOM SALE!

நவீன Design Cake Boxes
தாம்பூல அலங்காரம்
தாம்பூலப்பைகள்
Gift Items
மணப்பெண் தோழிகளுக்கான சேலைகள்(ஒரேமாதிரி)
மணமகனின் தோழர்களுக்கான வேட்டி சேட் மற்றும் குறுத்தா வகைகள் ( ஒரேமாதிரி)
Hena Tubes
வளைகாப்பு வைபவத்திற்கு கண்ணாடி வளையல்கள்

01.01.2019 ல் இருந்து 10€ பெறுமதியான Gift Vochers களைத்தவறவிடாதீர்கள் 100€ மேற்பட்ட கொள்வனவுக்கு மட்டுமே!

Gift Vochers





திருமணம் புரியும் புதுமண மலர்களுக்கு இதயம் மலர இணையில்லா ஆடைகள்!

Rheinische str-81
44137 Dortmund / D

Tel: 0231 54 50 028, 0171 330 65 42 ,0176 246 54 009

# முதுமையில் முதிர்ந்த காதல்






## சேவியர்

காதல் எனும் வார்த்தையைக் கேட்டதும் மனசுக்குள் என்னென்ன காட்சிகள் வருகின்றன ? இரண்டு இளசுகள் கரம் கோர்த்துக் கடற்கரையில் நடக்கிறார்களா ? சூரியன் பின்னணியில் மறைய இரண்டு சின்னஞ் சிறுசுகள் அரவணைத்துக் கொள்கிறார்களா ? காற்றுக்கே வெட்கம் வரும் வகையில் இரண்டு இதழ்கள் ஒரே நேரத்தில் கவிதை எழுதுகின்றனவா ? இப்படி ஏதோ ஒரு காட்சி தானே மனக்கண்ணில் விரிகிறது ?

காரணம் இல்லாமல் இல்லை. அப்படித்தான் நமது ஊடகங்களும், திரைப்படங்களும், இலக்கியங்களும் நமக்கு போதித்திருக்கின்றன. அந்த இலக்கணத்தை மீறித் தெறிக்கும் காதல்கள் கவனிக்கப்படுவதும் இல்லை. உண்மையில் காதல் என்பது இளசுகளுக்குள் உதித்து, இளசுகளோடு முடிந்து விடுவதா ?

காதல் என்பது வயதுகளை மீறிய வசீகரம். வருடங்களுக்குள் அடங்கி விடாத வசந்தம். அதை காலத்தின் சுழற்சியோடோ, பருவத்தின் மலர்ச்சியோடோ அடக்கி விட முடியாது. அது துவக்கத்துக்கும் முன்பே துவங்கி, முடிவுக்குப் பிறகும் தொடரும் ஒரு புரியாத புதிர்.

காதல் ஒரு விதை என வைத்துக் கொண்டால், அது எந்த நிலத்தில் விழுந்தாலும் முளைத்தெழும்புகிறது. இளைய நிலத்தில் விழுந்த விதை மாங்கனியையும், முதிய நிலத்தில் விழுந்த விதை பலாக்கனியையும் கொடுப்பதில்லை. விழுகின்ற விதைகளுக்கேற்ப மரங்கள் கனி கொடுக்கின்றன.

உண்மையில் முதுமைக் காதல் என்பது காதலின் வளர்ச்சி நிலை. முதுமைக் காதல் என்பது காதலின் வரம். முதுமைக் காதல் என்பது மானுடத்தின் மகத்துவம்.

சிறுவயதில் முளைவிட்டு, இளவயதில் கிளைவிட்டு, முதிர் வயதில் விழுதிறக்கிக் கிடக்கும் காதல்கள் கடவுளின் கருணையைக் கணக்கின்றிப் பெற்றவைகள். அப்படிப்பட்ட காதல் வாய்க்கப்பெற்றவர்கள் சிலரே. அவர்களே அடுத்த தலைமுறைக்கு உண்மைக் காதலின் அழியாச் சுவடுகளை வழங்கிச் செல்பவர்கள்.

சிறுவயதில் காதல் பாறையாய் இருக்கிறது. அதை காலம் தனது உளிக் கரங்களால் செதுக்கத் துவங்குகிறது. வாழ்வின் அனுபவ அடிகளைத் தாங்கிக் கொண்டு ஒத்துழைக்கின்ற உளியும், பாறையும் சிலையை நோக்கிப் பயணிக்கின்றன. வலிகளைத் தாங்காமல் பிரிந்து விடும் பாறைகள், சிலைகளைப் பிரசவிக்க முடியாமல் சிதைந்து விடுகின்றன. முதுமை, காதலின் சிலையைப் பிரசவிக்கிறது. காதலின் உன்னத நிலையை தரிசிக்கிறது.

## இதழ்கள் ஒரே நேரத்தில் எழுதும் கவிதை

இளவயதுக் காதல் தனது பயணத்தைக் கடற்கரையில் ஆரம்பிக்கிறது. வாழ்க்கை அலைகள் அவர்களை அலைக்கழிக்கின்றன. அலைகளின் எதிர்பாய்ச்சலை எதிர்கொண்டு பயணிக்கின்ற படகுகள், அலைகளைத் தாண்டிய அமைதிப் பாதைக்குள் பாதம் பதிக்கின்றன. பாதியிலேயே முடங்கி விடுகின்ற பயணங்கள் மீண்டும் கரைகளிலே தஞ்சமடைந்து விடுகின்றன. அவர்கள் இலட்சிய எல்லையான முதுமைக் காதலை முகர்ந்து பார்ப்பதில்லை.



இளமை உடலின் வலிமையைக் கொண்டு மனதில் வெற்றிடத்தை நிரப்ப முனைகிறது. முதுமை மனதின் வலிமையைக் கொண்டு உடலில் இயலாமையை இட்டு நிரப்பி நடக்கிறது. விழிகளின் கவர்ச்சியிலும், ஈர்ப்பின் கிளர்ச்சியிலும் மட்டுமே காதலை நுகரும் காதலர்கள் முதுமையின் மலர்ச்சோலைகளில் இளைப்பாறுவதில்லை.

இளமைக்காதல் எதிர்பார்ப்புகளின் மேல் கட்டப்பட்ட வீடாக இருக்கிறது, முதுமைக்காதலோ எதிர்பார்ப்புகளற்ற உறவின் மேல் கட்டப்பட்ட ஆலயமாய் இருக்கிறது.
எதிர்பார்ப்புகளின் எல்லைகளைத் தாண்டிய காதலில் புனிதத்தின் வாசனை மெலிதாய்க் கிளம்புகிறது.

ஈகோவின் முதுகில் ஏறி சவாரி செய்யும் இளமைக் காதல், முதுமையில் மறைந்து விடுகிறது. ஈஸி கோயிங் என ஈகோ தனக்கென ஒரு புதிய விளக்கத்தை எழுதிக் கொள்கிறது. விட்டுக் கொடுத்தல் சர்வ சாதாரணமாய் முதுமை மனங்களுக்கு சாத்தியமாகிறது. இதனால் தான் முதுமைக் காதல் முதன்மைக் காதலாகிவிடுகிறது.

தொடர்ச்சி 21 ம் பக்கம்




20ம் பக்கத் தொடர்ச்சி...

# முதுமையில் முதிர்ந்த காதல்






ஈகோவின் முதுகில் ஏறி சவாரி செய்யும் இளமைக் காதல், முதுமையில் மறைந்து விடுகிறது. ஈஸி கோயிங் என ஈகோ தனக்கென ஒரு புதிய விளக்கத்தை எழுதிக் கொள்கிறது. விட்டுக் கொடுத்தல் சர்வ சாதாரணமாய் முதுமை மனங்களுக்கு சாத்தியமாகிறது. இதனால் தான் முதுமைக் காதல் முதன்மைக் காதலாகிவிடுகிறது.
இளமைக் காதலுக்கு வாழ்க்கைப் போராட்டங்கள் மாபெரும் சுமை. பொருளாதாரப் போர்களுக்கும், தேவைகளுக்கான தேடல்களுக்கும் அவை ஓடித் திரியும். மிஞ்சிய நேரங்களில் பகிர்வதாகவே காதல் அமையும். முதுமையோ காதலைப் பகிர்வதிலேயே காலத்தைக் கடத்தும். காதலில் கசிந்துருகுவது இளமையெனில், காதலாகிக் கசிந்துருகுவது முதுமைக் காதல் எனலாம்.

இளமைக் காதல் செயல்களில் கட்டப்பட்ட உணர்வுகளின் பயணம். முதுமைக்காதல் உணர்வுகளில் கட்டப்பட்ட செயல்களின் பயணம். காதலின் பயணத்தில் இளமைக் காதல் சுமைகளைத் தாங்கும். முதுமைக் காதலை சுமைகளே தாங்கும். உறவுகளின் பிணைப்பு இருக்கும் போது, சுமைகளின் தவிப்பு தெரிவதில்லை.

நிபந்தனைகளற்ற அன்பு முதுமையின் கிளைகளில் தான் பூத்துக் குலுங்கும். அனுபவத்தின் ஆணிவேர்கள் வாழ்வின் நிலத்திலிருந்து பூக்களுக்கான புத்துணர்ச்சியை பிரித்தெடுத்துக் கொள்கின்றன. பண்டமாற்று முறையிலான சிந்தனைகள் அழிந்து போய், ஒருவரில் ஒருவர் சரணடைந்து கூடு விட்டுக் கூடுபாயும் உயிர்மாற்றுக் காதல் உருவாகிவிடுகிறது.

முதுமையின் சுருக்கங்களுக்கு இளமையின் பளபளப்பை விட பக்குவமான உணர்வுகள் எழுகின்றன. அவை அன்பினால் தோய்ந்து, வேற்றுமைகளை புன்னகையுடன் ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் வெளிப்படுகின்றன. அடுத்தவரைக் காயப்படுத்தாத உரையாடல்களினால் அழகுபடுத்தப் படுகின்றன. கரம் கோர்த்த மௌனத்தில் புனிதமடைகின்றன. சுயநலமற்ற சிந்தனைகளினால் முழுமையடைகின்றன.

சந்தேகங்களின் போராட்டக்களத்தை விட்டு விட்டு, நம்பிக்கையின் விளைநிலத்தில் முதுமை வந்தடைகிறது. வார்த்தை களின் போராட்டத்தைக் குறைத்துவிட்டு மௌனத்தின் மொழிபெயர்ப்புகளில் நடைபோடுகின்றன.

பதட்டத்தின் பாதைகளை விட்டு விட்டு, பாதுகாப்பின் நிச்சயத்தில் இளைப்பாறுகின்றன.

காதல் எப்போது வேண்டுமானாலும் முளை விடட்டும், அது முதுமையின் கடைசிப் படிக்கட்டு வரை பூக்கள் விடுக்க வேண்டும்.
காதல் எப்போது வேண்டுமானாலும் முதல் சுவடை வைக்கட்டும், ஆனால் அது முதுமையின் கடைசிக் கோடு வரை நடை போடட்டும்.

முதுமையில் முதிர்ந்த காதல்,
இளமையின் இலட்சியப் பரிசு.

காதலுடன் நடைபோடுவோம்
முதுமையின் நதிக் கரைகளில்,
இளமையின் முகவரிகளில்.

Vettimani.com

G.Vijay Home Designer
Sauber- Professionell - Pünktlich-Preiswert
web.www.vijay-home-designer.de
உங்கள் வீடுகளை
சிறப்பாக வடிவமைக்க நாடுங்கள்!
சிறந்ததொழில் தேர்ச்சிபெற்வர்களால்
குறித்த நேரத்தில் குறைந்த செலவில்
நேர்த்தியாகச் செய்து தரப்படும்.
e.mail:G.Vijay@outlook.de
zedernweg 20
41844 Wegberg
Germany
Inh.: Gunaratnam Vijayakumar
Telefon: +49 176 72 21 84 66
0176 7221 8466
Facebook:Vijay Home Designe Gunaratnam



Easy Holiday
Travels & Tours



உலகின் எப்பாகங்களுக்கும் சென்று வருவதற்கான விமான பயணச்சீட்டுகளை குறைந்த விலையில் நிறைந்த மனதுடன் தருகின்றோம்
தொடர்புகளுக்கு: Thureiraj Rukshan
Mob:0152 1365 4331 - 0152 04153138

எம் மக்களின் அபிமானம் வென்ற
Easy Holiday
Travels & Tours
தாய்நாடு சென்றுவர மலிவு விலையில்
- விமானச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதிகள்
- வாகன வசதிகள்
- வீசா உதவிகள் (இந்தியா இலங்கை)
- ஹோட்டல் வசதிகள்



Emirates ETIHAD Gulf Air OMAN AIR QATAR
Westring 36
44623 Herne
Germany
Tel:02323 965 4426 Fax:02323 9654427
e.mail: ezholiday16@gmail.com





# மனிதருக்கு மட்டுமல்ல காப்பகம். வீடு காப்பவருக்கும் காப்பகம்.

18.01.2019 இன்று நமது தாயகத்தில் ஒரு வித்தியாசமான அவசியமான ஒரு பணிக்குரிய ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றுள்ளது. வீட்டைக்காக்கும் நாய்க்கும் ஒரு சரணாலயம் அமைக்கும் திட்டமே அது.

சிவபூமி நாய்கள் காப்பகம். அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிப்பதற்கு நிலையம் இன்று எடுக்கப்பட்டது. பணிமுன்னெடுக்கும் நிகழ்வில் திரு.ஆறு.திருமுருகனுடன் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் கலந்து கொண்டனர். சிவபூமி அறப்பணியினை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் பொறுப்புடன் மிகச்சிறப்பாக ஆற்றிவருகின்றார்.

சிவபூமி அறக்கட்டளை - பன்முகப்பணிகள்
சிவபூமி மனவிருத்திப்பாடசாலை கோண்டாவில்: Tel: 021 222 7938
சிவபூமி மனவிருத்திப்பாடசாலை கிளிநொச்சி 021 228 5938
சிவபூமி யாத்திரிகர் விடுதி- சிவபூமி மடம்-சிவபூமி கலைக்களஞ்சியம். கீரிமலை - 021 321 2241
சிவபூமி விவசாயப்பண்ணை -நெல்லியான்,இயக்கச்சி (கோவில் வயல்) இயக்கச்சி
(கொற்றாண்டர் குளம்) நாவற்குழி செவ்விளநீர் தோட்டம்.
சிவபூமி மருத்துவ நிதியம்,சிவபூமி வாழ்வாதார நிதியம்.சிவபூமி கல்விநிதியம்.
கோண்டாவில் 021 222 7938
சிவபூமி தொழிற்பயிற்சி நிலையம் கோண்டாவில் 021 222 7938
சிவபூமிஞான ஆச்சிரமம் குப்பிழான் 021 205 5351
சிவபூமி பாடசாலை- சிவபூமி மடம் திருகோணமலை.
சிவபூமி முதியோர் இல்லம்-சுழிபுரம். 021 225 0085
சிவபூமி திருவாசக அரண்மனை-சிவதெட்சணாமூரத்தி கோவில் ஏ9 விதி நாவற்குழி
சிவபூமி எதிர்காலப்பணிகள்-சிவபூமி நாய்கள் சரணாலயம்.
சிவபூமி அரும்பொருட்காட்சியகம்.

# யேர்மனியில் றயின் நதிக்கரையில் டோமர்கன் நகரில் மார்கழிமகா உற்சவம் 12.01.2019



11 வது வருடமாக சங்கீத மும்மூர்திகளுக்கு இசையர்ப்பணம்.





சுவிஸ் நாட்டின்
அனைத்துப் பாகங்களுக்கும்
உடனுக்குடன்
விநியோகம் செய்யும் நிறுவனம்.

Sai Trader GmbH
Importeur für frische, exotische Gemüse | Früchte & Fische

சாயி ரேடர்ஸ்

Direct Importers & Distributors Exporters

உலகின் பலபாகங்களில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட
பசுமையான மரக்கறிவகைகள் மீன்கள் மற்றும் பழவகைகள்
பதனிடப்பட்ட கடல் உணவுவகைகள் குடிபான வகைகள்
அனைத்தும் சுவிஸ் நாட்டின் அனைத்துப் பாகங்களுக்கும்
உடனுக்குடன் விநியோகம் செய்யும் ஒரே நிறுவனம்.







Tel:+41 44 885 86 30 Fax: :+41 44 885 86 51
Wilenbachstrasse 3
8185 Winkel ZH

BTM தயாரிப்புக்களும்
ஆச்சி மசாலா
தயாரிப்புக்களும்
இங்கே கிடைக்கும்.

# யேர்மனியில் பூவரசு சஞ்சிகை ஆசிரியர் "இந்து மகேஷ் படைப்புலகம்" நூல் வெளியீட்டு விழா






கடந்த 20.01.2019 ஞாயிற்றுக்கிழமை யேர்மனியில் சால்புறுக்கனில் St.Ingbert நகரில் இலக்கியச் செம்மல் இந்துமகேஷ் அவர்களின் (பூவரசு சஞ்சிகை ஆசிரியர்) இந்துமகேஷ் அவர்களது படைப்புலகம் என்னும் நூல்வெளியிடு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நூலை அவரது பிறந்தநாள் பரிசாக அவர்களது பிள்ளைகள் வெளியிட்டு இலக்கிய உலகத்திற்கு ஓர் இன்ப அதிர்ச்சி கொடுத்தனர்.

அவரது வாசகர்கள் நிறைந்த அவையில் ஓர் நிறைவான விழாவாக அமைந்தது. முதல்பிரதியை திரு.செ.செல்வகுமார் அவர்கள் (புங்குடுதீவு மறுமலர்ச்சி ஒன்றியத்த தலைவர் யேர்மனி - ராட்டிங்கன்) பெற்றுக் கொண்டார். சிறப்புரையாற்றிய வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் இந்துமகேஷ் அவர்களது படைப்புக்களை எவ்வாறு உள்வாங்கிக்கொண்டார் என்பதனையும், அவரது எழுத்தில் உள்ள யதார்த்தையும் எடுத்துரைத்து வெற்றிமணி மற்றும் சிவத்தமிழில் வந்த பல கட்டுரைகள் இந்த நூலை அலங்கரிப்பது கண்டு பெரிமிதமடைவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் செல்வகுமார் அவர்கள் இந்துமகேஷ் அவர்களது துடிப்பான எழுத்துக்களை அவரது துடிப்பான இளமைக்காலத்தில் இருந்து ஒவ்வொன்றாகச் சொல்லி அவரது இலக்கிய வாழ்வை மனக்கண்முன் நிறுத்தினார். விழாவில் இந்துமகேஷ் அவர்களின் தீவிரவாசகர்கள் பலர் அவரது உயர்பண்புகளை சிறப்பாக எடுத்துரைத்தனர்.

பிள்ளைகள் பெற்றோர் வாழும்போதே அவர்களது சேவையை பதிவுகளாக வெளியிட்டு ஆவணப்படுத்தும் பண்பு எல்லோரும் பின்பற்றவேண்டிய ஒன்றாகும். அவரது பிள்ளைகளுக்கு வெற்றிமணியின் வாழ்த்துக்கள்.

## நிகழ்வின் நிழல்கள்






யேர்மனி கஸ்ரொப் றவுக்சல் தமிழாலயத்தின் தைப்பொங்கல்விழா தமிழாலயத்தின் பொங்கல்விழா (19.01.2019) | ஸ்ரீ நவதுர்க்காதேவி ஆலய பொங்கல்விழா (19.01.2019)





பிலபெல்ட் தமிழ் யோர்மன் கலாச்சர மன்றமும் தமிழ் மக்களும் ஒன்றிணைந்து வழங்கிய பொங்கல் விழா.19.01.2019 படங்கள் : நந்தபாலன்.





Düren நகரில்....


உங்கள் வீட்டில்
நடக்கும் விழாக்கள்
வைபவங்களுக்கு
ஏற்ப சிறப்பான,
தரமான சுவையான
சைவ, அசைவ,
உணவுகள்
நேர்த்தியாகத்
தரப்படும்
அறுசுவை படைக்க
எம்மை அழையுங்கள்



'AMMA Restaurant" Neue- Jülicher Straße 17 52353 Düren Tel: 02421 - 780 6222

Mo-Fr:17:00-22:00
Sa,So,& Feiertage: 15:00-22:00
Dienstag:Ruhetag


PALAZIO
EVENTS
உங்கள் இல்லத்தின்
சகல விதமான மங்கல வைபவங்களை
உங்கள் விருப்பத்திற்கேற்ப அனைத்து சேவைகளுடனும்
ஒரே இடத்தில் கொண்ட ஓர் அழகிய மண்டபம்.
0-100 மற்றும் 0-700 விருந்தினர்கள் வரை அமரக்கூடிய வாகனத்
தரிப்பிட வசதிகளுடனும் கூடியது.
மேலும் எம்மிடம்....
மாலைகள், ஐயர், தவில் – நாதஸ்வரக் கச்சேரி, போட்டோ – வீடியோ,
பாட்டுக் கச்சேரி, நடனம், தங்கு விடுதி,
மணமகள் அலங்காரம், மேடை அலங்காரம், சொகுசு வானகவசதி,
Limousine Car மற்றும்
பல தேவைகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.
+ (49) 1525 3961138 Kasinostr. 25 |42103 Wuppertal



# காதலிற்கு கற்புண்டா?


**சிந்தனை சிவவினோபன்.**

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்று சொல்வதைப் போன்று, கற்பில்லா உறவு எப்போதும் நிலைக்காது. அதனால்த் தான் வையகத்தில் வாழ்கின்ற மனிதர்களும் நிலையாக நீண்டநாள், துணையாக இருப்பதில்லை. அதில் காதல் மட்டும் என்ன விதிவிலக்கா? கற்பிழந்த காரணத்தால், காதலுமிங்கு கயிறறுந்த காற்றாடிபோல், காற்றிளுக்கும் திசைகளில் வழிமாறிச் செல்கின்றது.

காதலிற்கு கற்புண்டா? என்ற கேள்வி உங்களை போல் எனக்கும் எழுந்தது. கேள்விக்குப் பதில் காண வேண்டும் என்ற வேள்வித் தீ எனக்குள் எழ, காதல் எப்படி உருவாகுகின்றது என்ற காரணத்தை அலசினேன். விஞ்ஞானிகள் சொல்கின்றனர், காதல் ஹார்மோன்களின் கசிவு என்றும். கவிஞர்கள் சொல்கின்றனர் காதல் கடவுளின் வடிவு என்றும். ஆகவே காதல் என்பதைத் தெளிவாக விரிவாக புரிந்துகொள்ளவேண்டும் என்றால், காதல் என்பதன் வரைவிலக்கணத்தைப் பார்க்க வேண்டும். அன்பின் ஒரு வடிவமே காதல். அந்தவகையில் கவிஞர்கள் சொல்வது உண்மையாகின்றது. அன்பே இறைவன் என்று தான் எல்லா மதங்களும் சொல்கின்றன. ஆகவே காதல் கடவுளின் வடிவு தான். குறிப்பிட்ட வயதைத் தாண்டும் போது தான் காதல் மலர்கின்றது, ஆகவே விஞ்ஞானம் சொல்வதைப் போல ஹார்மோன்கள் சுரக்கும் போது காதலும் பிறக்கின்றது என்பதில் உறுதியடையலாம்.

இயற்கையாகச் சுரக்கும் ஹார்மோன்கள் எப்படி எல்லோரிடமும் சுரப்பதில்லை என்ற வினாவும், இறைவனின் வடிவம் தான் காதல் என்றால் ஏன் காதலைக் கடந்து முனிவர்கள் இறைவனைக் காண்கின்றனர் என்ற கேள்விகளும், மீண்டும் இந்தத் தலைப்பில் ஒரு சர்ச்சையை ஏற்படுத்த முனைகின்றன. காதல் என்பது குறிப்பாக ஒருவருக்கு ஒருவர் இடையில் உண்டாகும் மாய உறவு (பெரும்பான்மையாக) ஆகும். காதல் எப்படி உருவாகுகின்றது என்பதை உணர்ந்தால், ஒருவேளை இதற்கான பதில் கிடைக்கலாம்.

காதல் என்பது ஒருவகையான பாதுகாப்புணர்வு. இந்த உலகில் வாழும் மனிதர்கள் பொதுவாக ஆழ்ந்த பயத்தில் வாழ்ந்து வருகின்றனர். உலகில் வாழும் உயிரினங்களின் வாழ்க்கை முறையைப் பாருங்கள், ஒரு உயிரைக் கொன்றால்த் தான் இன்னொரு உயிர் வாழமுடியும் என்ற அமைப்பில்த் தான் இயங்குகின்றது. ஆகவே மனிதனும் அதேபோலத் தான் இருந்து, பிறந்து, பரிணாம வளர்ச்சியில் பண்பாடு அடைந்துள்ளான். இருப்பினும் ஒவ்வொரு உயிருக்குள்ளும் இருக்கும் அந்தத் தனிமை உணர்வு மற்றும் பயம் மனிதனுக்குள்ளும் உண்டு. அதை போக்கவே மனிதன் கூட்டம் கூட்டமாக வாழத் தொடங்கினான். இந்தக் குணம் மற்றய சில உயிரினங்களுக்கும் உண்டு. (ஊம்- மாடு, ஆடு, யானை ....) ஆனால் மனிதனின் அந்த ஒற்றுமையில் ஒரு விரிசல் ஏற்பட மனிதனுக்குள் பிளவு ஏற்பட்டது. அதனால்தான் மனிதன் தன்னை பிற மனிதரிடம் இருந்து





காத்துக்கொள்ளும் எண்ணத்தில் தன் கூட்டத்தில் ஒரு பிணைப்பை ஏற்படுத்தினான். அந்தப் பிணைப்புத் தான் அன்பு. அதனால்த்தான் பாருங்கள், எம்மை பாதுகாப்போர் மீது அன்பு வரும். அந்த அன்பு, இரத்த சொந்தத்தில் பாசமாகவும், மற்ற சொந்தத்தில் நட்பாகவும், இரத்தக் கலப்புச் சொந்தத்தில் காதலாகவும் பெயரிடப்பட்டது. இரத்தக் கலப்புச் சொந்தம் என்பது திருமண பந்தம், ஒரு பெண்ணுக்கு தன்னைப் பாதுகாக்கும் தகுதி கொண்ட ஆணைப் பார்க்கும் போதும், ஒரு ஆணுக்கு தன்னை பாதுகாக்கும் குணாதிசயம் கொண்ட பெண்ணைப் பார்க்கும் போதும், இரத்தக் கலப்பு அன்பு உருவாகும் (ஹார்மோன் சுரக்கும்) வண்ணம் எம் உடல் பரிமாண வளர்ச்சி அடைந்துவிட்டது. எப்படி என்றால், மீனாக இருந்த உயிரினம் கடலில் உணவுப் பற்றாக்குறையால் மெதுவாக தரை நோக்கி வந்ததால் முதலையாக மாறியதை போல.

அப்படி என்றால் கற்பென்றால் என்ன? என்ற கேள்விக்கு, இலகுவாக அதன் பெயரிலேயே விடையுண்டு ( கற்பு ஸ்ரீ காப்பு ). மனிதன் தன் பயத்தைப் போக்க தனிமையைத் தவிர்த்து கூடமாக இருக்க உருவாக்கிய அன்பைப் பாதுகாக்கவே கற்பை வடிவமைத்தான். ஒரு உறவில் உள்ளவர்களுக்குள் போடப்படும் மாயை ஒப்பந்தம் தான் கற்பு. நீ என்னோடு நேர்மையாக இருக்க வேண்டும், உண்மையாக இருக்க வேண்டும், நாம் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்பதே கற்பின் கொள்கைகள். ஆகவே காதலிற்கு கற்புண்டா? என்ற கேள்விக்கு பதில் தெரிந்தவர்கள், உங்களுக்கு மிகவும் பிடித்த உங்கள் மீது அன்புகொண்டவர்களிடம் அல்லது நீங்கள் மிகவும் அன்புகொண்டவரிடம் இந்தக் கட்டுரையைப் பகிர்ந்து உங்கள் அன்பைப் புரிந்துகொள்ளுங்கள்.

கற்பு ஒளிந்திருப்பது, கருவறையில் அல்லை, - உன்
கற்பனையில்த் தான். நம்பிக்கை கொண்ட உறவினில் மட்டுமே,
நியாமான கற்புண்டு.








Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
ஒருவருட
இணைப்புச் சந்தா
£/€ 89
SET TOP BOX
INCLUDED
புதுப்பித்தல்
£/€ 69
13 மாதங்கள்
70க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
தமிழ்
KTV
JAYA TV HD
கலைஞர்
TENT KOTTA
1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்
EROS NOW
4000க்கும் அதிகமான தமிழ்த் & ஹிந்தி திரைப்படங்கள்
BAJIRAO MASTANI
Ki & Ka
DOWNLOAD VIDEOS
Look for this symbol to Download TV episodes to watch on the go without using data
MOBILE & TABLET
App Store
Google Play
OFFLINE VIEWING FEATURES
நிகழ்ச்சிகளை DOWNLOAD செய்து, INTERNET இணைப்பின்றி உங்களுக்கு விரும்பிய நேரத்தில் பார்க்கும் வசதி
• Selected channels only
UNITED KINGDOM
0207 132 2727
GERMANY
069 1200 7102
FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.
www.lycatv.tv

# ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட தமிழ் எழுத்துக்கள்



## நெதர்லாந்தில் சோழர் தமிழ் செப்பேடுகள்!

இன்றைக்கு சற்றேரக்குறைய ஆயிரமாண்டுகளுக்கு முன்னர் தென்னிந் தியாவின் பெரும்பகுதியையும்,ஈழத்தின் பெரும்பகுதியையும் ஆட்சிசெய்து தஞ்சையில் விண்ணுயர பெரியகோயில் கட்டிய சோழன் இராஜராஜன். இவனது காலத்திய தமிழ் செப்பேடு ஒன்று இன்றைக்கும் நெதர்லாந்து நாட்டில் பாதுகாக்கப்படுகிறது. கேட்கவே ஆச்சர்யமாய் இருக்கிறது அல்லவா ? வாருங்கள் அதனைப் பற்றி பார்ப்போம்

தாய்நாட்டில் இருக்கும்போது சோழர் பாண்டிய வரலாறுகளை புரட்ட ஆரம்பித்த காலத்திலிருந்தே லெய்டன் செப்பேடுகளை பற்றி படித்ததுண்டு, சோழர் காலத்திய இரண்டு செப்பேடுகள் நெதர்லாந்து நாட்டின் லெய்டன் நகர அருங்காட்சியகத்தில் இருப்பதாக இருவரி செய்திகளாகவும், இந்திய தொல்லியல்துறை பதிப்பாம் எபிகிராபிகா இண்டிகாவிலும் பார்த்ததுண்டு !

டியூலிப் தேசமாம் ஒல்லாந்தில் பணிநிமித்தமாய் வந்து சோழர் செப்பேடுகளை தேடிச்சென்று காண்பது ஒரு புது அனுபவம் தான், காற்றில்லா இடத்தும் கடந்து செல்லும் காதல் போல் தமிழும், தமிழின் சுவடுகளும் உலகெலாம் பரவியுள்ளன!
கடல்கடந்த நாடாம் கடாரத்து அரசன் சோழ நாட்டில் நாகபட்டினத்து அமைத்த சூளாமணி பன்ம விஹாரத்திற்கு சோழமன்னர்கள் செய்த கொடையை சொல்ல செப்பேடுகள் எழுதப்பட்டன, இந்த செப்பேடுகள் இன்று சோழ நாட்டில் இல்லை கடல் கடந்து மற்றோர் தேசமாம் நெதர்லாந்து எனும் ஒல்லாந்தில் உள்ளது.

லெய்டன் பெரிய செப்பேடு, லெய்டன் சிறிய செப்பேடு என்று இரண்டு செப்பேடுகள் லெய்டன் அருங்காட்சியகத்தின் பிரத்தியேக சேகரிப்பு பகுதியில் உள்ளன.
1. பெரிய லெய்டன் செப்பேடுகள் (21 ஏடுகள்) - முதலாம் இராஜராஜ சோழன், முதலாம் இராஜேந்திர சோழன்
சமஸ்கிருதம்- 6 ஏடுகள், 111 வரிகள்
தமிழ்- 15 ஏடுகள் ,332 வரிகள்
2. சிறிய லெய்டன் செப்பேடுகள்(3 ஏடுகள்)- முதலாம் குலோத்துங்கன்

எப்படி இந்த செப்பேடுகள் நெதர்லாந்து வந்து சேர்ந்தன?
எப்படி இந்த செப்பேடுகள் நெதர்லாந்து வந்து சேர்ந்தன என்ற கேள்விக்கு, அந்த லெய்டன் நூலகத்தில் இந்த செப்பேடு களுடன் அவர்கள் வைத்திருந்த குறிப்பு விடையளித்தது, இந்த இரண்டு செப்பேடுகளும் ஒல்லாந்ததை சேர்ந்த திரு பிலோரென்ஷியஸ் காம்பெர் என்பவரால் இந்தியாவிலிருந்து ஒல்லாந்து (நெதர் லாந்து) கொண்டுவரப்பட்டன, இவர் பட்டாவியா அமைச் சராயிருந்தார்.



**தனசேகர் .பிரபாகரன்.**

அவரது குடும்ப சொத்தாக இருந்த இந்த இரண்டு செப்பேடுகளும் அவரது கொள்ளுப்பேத்தி திருமதி ஜோஹன்னா காம்பெர் என்பவருக்கு வர, அவரை மணந்த கணவர் ஹெச்.ஏ. ஹாமேக்கர் என்பவர் இந்த செப்பேடுகளை 1862 ஆம் ஆண்டு லெய்டன் பல்கலைக்கழக நூலகத்திற்கு அளித்தார். இப்படி இந்த செப்பேடுகள் கடல் கடந்து லெய்டன் வந்து சேர்ந்தன.
ஏன் இந்த செப்பேடுகள் முக்கியம்?

கடல் கடந்து இந்த தூரதேசத்திலும் மிகவும் சிறப்பாய் பாதுகாக்கப்படுகின்ற தமிழர் பொக்கிஷங்களில் இவைகளுக்கு முதலிடம். இன்றைக்கும் படிக்கக்கூடிய அளவு தெளிவாய் மிக கவனத்துடன் வைக்கப்பட்டுள்ளது.

சோழ நாட்டிற்கும் இன்றைய மலேயா தீபகற்பத்தில் இருக்கும் கடார தேசத்திற்கும் இருந்த தொடர்புக்கு ஆதாரமாய் விளங்குகிறது. இதனால் கடல் கடந்தும் பரவியிருந்த சோழர் செல்வாக்கை அறியமுடிகிறது.
இவைகளில் இடம்பெற்றுள்ள வடமொழி சுலோகங்களால் சோழ மன்னர்களின் வரிசையையும், வரலாற்றையும் அறிய முடிகிறது.

மெய்க்கீர்த்திகளால் மன்னனின் வீரச்செயல்களும், அவர்கள் ஆற்றிய போர்களும் வெற்றிகளும் அறியமுடிகிறது.
சோழநாட்டின் உட்பிரிவுகள், ஊர்ப்பெயர்கள், அந்த காலத்து வாழ்ந்த மக்களின் பெயர்கள், நிலஅளவைகள், வரிகள் பற்றி அறியமுடிகிறது.
சைவ வைணவ கோயில்களை பேணியது போல புறசமயங்களான பௌத்த, சமணப்பள்ளிகளையும் சோழ வேந்தர்கள் பேணினர் என்பதும் நோக் கத்தக்கது.
இடைக்கால தமிழக வரலாற்றை மீள்கட்டமைத்து வரலாறு அறிய, மிகவும் உதவியாக இந்த செப்பேடுகள் திகழ்கின்றன. எங்கிருக்கிறது செப்பேடுகள் ? எப்படி காணலாம்?
நெதர்லாந்தின் தலைநகரம் ஆம்ஸ்டர்டாம் ஸ்கிபோல் விமான நிலையத்திலிருந்து சுமார் முப்பது.்.நாற்பது நிமிட இரயில் பயணத்தில் வரும் இடமே லெய்டன், புகழ்பெற்ற பல்கலைக்கழகம் அமைந்துள்ள ஊர். நெதர்லாந்தில் இரயில்பயணம் மிகவும் சுலபமும் அதிவேகமானதும் ஆகும். லெய்டன் சென்ட்ரல் இரயில் நிலையத்தில் நீங்கள் இறங்கினால் கூகிள் மேப் பார்த்து நடந்து செல்ல சுமார் பத்து நிமிடம் பிடிக்கும், பேருந்தில் சென்றால் மூன்று நான்கு நிமிடத்தில் லெய்டன் பல்கலைக்கழக வாசலை அடையலாம்.
லெய்டன் பல்கலைக்கழக நூலகத்தின் சிறப்பு சேகரிப்பில் இந்த செப்பேடுகள் உள்ளன, சிறப்பு சேகரிப்பு "திங்கள் முதல் வெள்ளி" வரை காலை 9 மணி முதல் மாலை 5 வரை திறந்திருக்கும். நூலகத்தை பார்வையிட உங்களுக்கு ஒரு நாள் பார்வையாளர் அட்டை அல்லது ஒரு வருட அட்டை தேவைப்படும். வரலாற்றில் ஆர்வமுள்ள தமிழர்கள் இந்த ஒல்லாந்து பகுதிக்கு அருகே இருக்கிறீர்கள் என்றால் கட்டாயம் ஒரு முறை போய் பார்த்து வாருங்கள் ! ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட தமிழ் எழுத்துக்களை கையால் தொட்டு உணருங்கள் !






## தைத்திருநாள் வரவேற்பு விழா எசன் ஜேர்மன். 12.01.2018. சனிக்கிழமை










Foto -Nathan-Dotmund





# காதல்

02 ம் பக்கத் தொடர்ச்சி

இவ்வாறான பண்புகளைக் கொண்ட காதலானது பெண்களிடத்து மென்மையானது, ஆண்களின் காதல் பாதுகாப்பானது. பெண்களின் காதல் அப்படியில்லை. எந்த நேரத்திலும் அழிந்து போகலாம் என்பதற்கு அத்தாட்சியாக குறிஞ்சிநிலத்துத் தோழி தன் வாயிலாக தலைவனுக்குப் புலப்படுத்துகின்றாள்.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"

அதாவது, வேரிலே பழுக்கின்ற பலாப்பழங்களையுடைய மலைச் சாரலையுடைய மன்னனே. இங்கே பெரிய பலாமரமொன்றின் சிறிய கொம்பில் சிறிய காம்பில் பெரிய பழம் தொங்குவதுபோல் தலைவியின் காமம் என்கிறாள்.

இதனையே வள்ளுவரும்,

"மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்
செவ்வி தலைப்படு வார்"

எல்லாவற்றிலும் மெல்லியதாகிய பூவைவிட காமம் மெல்லியது. அதன் உண்மையை அறிந்து அதன் நல்ல பயனைப் பெறக்கூடியவர் சிலரே எனக் கூறும் வள்ளுவரை நிலைநிறுத்தி, ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையே எழும் காதல் நிலத்தை விடப் பெரியது, வானத்தை விட உயர்ந்தது, நீரை விட அளவற்றது எனக்கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.










யேர்மனியில்- டோட்மூண்ட் - நகரில் தமிழர் கலையரங்கில் நடைபெற்ற பொங்கல் விழாவில் (15.01.2019) இருந்து சில காட்சிகள்.-

படங்கள்:வெற்றிமணி









# யேர்மனி எசன் மாநகரில் பொங்கல் விழா 19.01.2019










எமது ஸ்தாபனம் வெள்ளிவிழாக் காண
ஆதரவு தந்த வாடிக்கையாளர்களுக்கு எமது நன்றி
25 ANNIVERSARY
APIRAAMI ENTERPRISE
அபிராமி என்றபிறைஸ்
22.01.1994 - 22.01.2019
APIRAMI ENTERPRISE Exotic Food A.to.Z
PFERDEMARKT 9 45127 ESSEN Tel : 0201 23 69 25

## கடந்த 22.1.2019 வெள்ளி விழாக்கண்ட அபிராமி என்றபிறைஸ் ஸ்தாபனத்தின் கொண்டாட்டத்தில் இருந்து சில காட்சிகள்





வாழ்த்துக்கள் வழங்கியும் இணைந்தும் பயணிக்கும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனம் நிறைந்த நன்றி








உங்கள் இல்லத்தில் இருந்தே தமிழ் உலகை வலம் வரலாம்

15 மாதச் சந்தா
12+3 மாதம்
விபரம் அறிய தொடர்பு கொள்ளுங்கள்

FRANCE
191 Rue du faubourg
Saint- Denis 75010 Paris
06 26 06 05 22
07 54 11 20 20

GERMANY
Rheinishe Str.64
44137 Dortmund
Tel:0049 231 177 21 820
Mob:0049 173 80 48 459

KERVEN GMBH
Rheinishe str.64 - 44137 Dortmund
www.Kerven-gmbh.com
0231 177 21 820
YUPPTV
Lebara play




## Dr.நிரோஷனின் அதிசய உலகம்

ஒவ்வொரு வருடமும் எத்தனைப் பூச்சிகளை உண்கிறோம்?
எதிர்காலத்தில் உலக மக்கள் தொகை அதிகரிக்கும் காரணத்தால், பூச்சிகளையும் சாப்பிட வேண்டும் என்கிற ஒரு நிலைமை வரப்போகின்றது. எதிர் காலத்தில் என்ன, தற்போதே பல நாடுகளில் பூச்சிகளை சுய விருப்பத்துடனேயே உண்கிறார்கள். குறிப்பாக வெட்டுக்கிளிகள் போன்ற உணவுப் பூச்சிகளை சில்லறை உணவகங்களில் கேட்டு வாங்கி சுவைத்திடலாம். சரி, பூச்சிகளைத் தெரிந்தே உண்பவர்களை விடுங்கள். நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். தங்களுக்குத் தெரியாமலே எத்தனைப் பூச்சிகளை ஒவ்வொருவரும் உண்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? அட, அது எப்படி தெரியாமல் பூச்சிகளை உண்பது என்று உங்களுக்குள் சந்தேகம் ஏற்பட்டால், தொடர்ந்து படியுங்கள்!

அது எப்படி நமக்குத் தெரியாமலேயே பூச்சிகளை உண்கிறோம் என்று கேட்கிறீர்களா? தூங்கும் போது நமக்குத் தெரியாமல் பூச்சிகளை உண்பது ஒரு பக்கம் இருக்கட்டும், ஆனால் அதை விட அதிகமாக பூச்சிகளை நாம் சாப்பிடும் உணவுகளுடன் உண்கிறோம்! அதுவும் ஒவ்வொரு வருஷமும் சராசரியாக அரைக் கிலோகிராம் பூச்சிகளை உட்கொள்கிறோமாம். இப்படி உண்ணும் இந்தப் பூச்சிகள் பெரும்பாலும் வேறு உணவுப் பொருட்களிலே கலந்திருக்கிறதாம்!

சும்மா ஒரு உதாரணத்திற்கு, நிலக்கடலையில் செய்யப்படும் வெண்ணெய்யில் அதாவது Peanut Butterஇல், ஒவ்வொரு 100 கிராமுக்கும் சராசரியாக 30 பூச்சிகளின் பாகங்களைக் கலப்பதற்கு FDA என்கிற அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் அனுமதிக்கிறது. பழச்சாறில், அதாவது Juiceஇல் ஐந்து Fruit Fly எனப்படும் பூச்சிகளின் முட்டைகள், மற்றும் ஒன்று அல்லது இரண்டு இளம் உயிரிகளும் அதாவது larvaவும் கலந்து கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இதை எல்லாவற்றையும் விட, குறிப்பாக என்னை பாதித்த விஷயம் என்ன தெரியுமா?
நான் மிகவும் விரும்பும் அந்தச் chocolate இல் கூட பூச்சிகள் கலந்திருக்குமாம்! 100 கிராம் chocolate இல் சராசரியாக 60 பூச்சிகளின் பாகங்களைக் கலப்பதற்கு அனுமதி உள்ளதாம்.

நண்பர்களே, உண்ணும் உணவுகளில் பூச்சிகளும் கலந்து இருக்கலாம் என்பதை நாங்கள் மறுக்கவே முடியாது. இதில் கவனிக்கவேண்டிய விஷயம் என்னவென்றால், அப்படிக் கலந்திருப்பது மனிதனை எவ்விதத்திலும் பாதிக்கப்போவதில்லை. உண்மை சொல்லப் போனால், அது நமக்கு நன்மையைத் தான் தருகிறது, ஏனென்றால் பூச்சிகளில் அதிகளவில் புரதச் சத்து உள்ளது.

சரி நண்பர்களே, இனி நீங்கள் கூறுங்கள்! பூச்சிகளை தெரியாமலே இவ்வளவு காலமும் சாப்பிட்டுக்கொண்டிருந்தீர்கள் என்று இன்று அறிந்ததும் எப்படி இருக்கிறது?

## பூமியில் எவ்வளவு தண்ணீர் உள்ளது?



ஒரு சராசரி வாளியினுள் எவ்வளவு தண்ணீர் அடங்கும்? என்ன ஒரு ஐந்திலிருந்து பத்து லிட்டர் இருக்கும், சரி தானே? சரி, வாளி ஒரு பக்கம் இருக்கட்டும், வாளிக்குப் பதிலாக இனி நமது பிரம்மாண்டமான பூமியை எடுத்துக் கொள்வோம். நமது பூமியில் நிறைய நீர் உள்ளது என்பது எல்லோருக்குமே தெரிந்த ஒரு விஷயம் தான், ஆனால் உண்மையில் பூமியில் ஒட்டுமொத்தமாக எவ்வளவு லிட்டர் தண்ணீர் இருக்கின்றது என்பது உங்களுக்குத் தெரியுமா? தெரியவில்லை என்றால் கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்.

சரி, பூமியில் எவ்வளவு லிட்டர் தண்ணீர் இருக்கின்றது என்பதைத் தெரிய முதல், பூமியில் இருக்கும் தண்ணீரைப் பற்றி சில சுவாரசியமான விஷயங்களை அறியத் தருகின்றேன். பூமியில் உள்ள நீர் ஒரு தொடர்ச்சியான சுழற்சியைக் கொண்டுள்ளது. அது, கடலில் இருந்து ஆவியாகிக் காற்று மூலம் பயணித்து, நிலத்தில் மழையாக இறங்கி, பின்னர் மீண்டும் கடலில் பாய்கிறது.

நமது உலகின் சுமார் 70 சதவீதமான நிலப் பரப்பு கடல்கள் மற்றும் சமுத்திரங்களால் ஆனது. மற்றும் கடலின் சராசரி ஆழம் பல ஆயிரம் மீட்டர் ஆகும். பூமியில் உள்ள தண்ணீரில் 98 சதவீதம் சமுத்திரங்களில் உள்ளது அதன் உப்புத் தன்மை காரணமாகவே அதைக் குடிநீராகப் பயன்படுத்த முடிவதில்லை. இரண்டு சதவீதத் தண்ணீர் மட்டும் தான் குடிநீராக உள்ளது, ஆனால் இந்த 2 சதவீதத்திலும் 1.6 சதவீதம், துருவக் கட்டிகள் மற்றும் பனிப்பாறையில் உறைந்து கிடக்கிறது. 0.36 சதவீதம் நீர்நிலைகள், கிணறுகள் மற்றும் நிலத்தடி நீராக இருக்கிறது. புவியில் இருக்கும் மொத்த நீரில், 0.036 சதவீதம் மட்டுமே ஏரிகள் மற்றும் ஆறுகளில் காணப்படுகிறது. மீதியுள்ள நீர், மேகங்கள் மற்றும் நீராவியாகக் காற்றில் மிதந்து கொண்டு இருப்பது மட்டுமல்லாமல், மேலும் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் உடலில் கூட இருக்கிறது. ஏன் உங்கள் உடல் கூட சுமார் 65 சதவீதம் நீரால் தான் அமைக்கப்பட்டிருக்கிறது.

நீர் இல்லாமல் நமது புவியில் உயிரே தோன்றியிருக்காது என்பது மறுக்கமுடியாத ஒரு உண்மை ஆகும்!


சரி போதும், இது எல்லாமே ஒரு பக்கம் இருக்கட்டும். இனி நான் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு வருவோம். நமது பிரம்மாண்டமான இந்தப் பூமியில் எவ்வளவு நீர் உள்ளது? சொல்கிறேன் கேளுங்கள்! நமது பூமியில் சுமார் 1,3 கோடி கோடி கோடி லிட்டர் தண்ணீர் உள்ளது. என்ன தலையே சுற்றுகின்றதா?

எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh) அறியத் தாருங்கள்!

சிறந்த ஒளிப்பதிவு!
0049 152 33 83 29 55
Nimal
Video & Photo
namilvideo@gmail.com




விஜய்
உங்கள் விஜய் தொலைக்காட்சியில்
Associate Sponsors
MON - FRI
AT 9 PM
பாண்டியன் ஸ்டோர்ஸ்
Subash Purity of Taste
SAGHANA JEWELLERS
MON - FRI
AT 8.30 PM
சின்னதம்பி
RESTAURANT coffee india
SAT - SUN
AT 7 PM
Super Singer Junior
BTM Food Products
IMPORTAS Cash & Carry
MON - SAT
AT 6.30 PM
மௌன ராகம்
Suriya Jewellers
உண்மையே வெல்லும்
MON - SAT
AT 3.30 PM
நீலக்குயில்
SSR TEXTILESS
EAST HAM LONDON
TO ADVERTISE CONTACT : +44-7530623862 / +44-2081443914
எதிலும் புதுமை, தமிழன் பெருமை



# திருமந்திரமும் வாழ்வியலும் 34

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## திருக்குறளும் திருமந்திரமும்

கிறீஸ்த்துவுக்குப் பின் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் திருவள்ளுவரின் திருக்குறளும், கிறீஸ்த்துவுக்குப் பின் நான்காம், ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் திருமூலநாயனாரின் திருமந்திரமும் பல விடையங்களில் கருத்தொற்றுமை மட்டுமல்லாமல் சொற் பிரயோகங்களிலும் ஒன்றுபட்டுக் காணப்படுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் பாயிரத்தில் இரண்டாம் அதிகாரத்தில் வான்சிறப்பு பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 11 இலிருந்து 20 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பதின்நான்காம் அதிகாரத்தில் வான்சிறப்பு பற்றி வரும் இரண்டு பாடல்களும் (பாடல் எண் 248, 249 ) வான்சிறப்புப் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் பாயிரத்தில் நான்காம் அதிகாரத்தில் அறம் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 31 இலிருந்து 40 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பதின்நான்காம் அதிகாரத்தில் அறம் பற்றி வரும் இருபது பாடல்களும் (பாடல் எண் 250 இலிருந்து 269 வரையும்) அறம் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் இல்லறவியலில் எட்டாம் அதிகாரத்தில் அன்புடைமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 71 இலிருந்து 80 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பதினெட்டாம் அதிகாரத்தில் அன்புடைமை பற்றி வரும் பத்துப் பாடல்களும் (பாடல் எண் 270 இலிருந்து 277 வரையும், 279, 280 பாடல்களும்) அன்புடமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் இல்லறவியலில் பன்னிரண்டாம் அதிகாரத்தில் நடுவுநிலைமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 111 இலிருந்து 120 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இருபத்திமூன்றாம் அதிகாரத்தில் நடுவுநிலைமை பற்றி வரும் நான்கு பாடல்களும் (பாடல் எண் 320 இலிருந்து 323 வரை) நடுவுநிலையைப் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் இல்லறவியலில் பதினைந்தாம் அதிகாரத்தில் பிறன்மனை நயவாமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 141 இலிருந்து 150 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இருபத்திமூன்றாம் அதிகாரத்தில் பிறன்மனை நயவாமை பற்றி வரும் எட்டுப் பாடல்களும் (பாடல் எண் 201 இலிருந்து 208 வரை) பிறன்மனை நயவாமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் இருபத்தி ஆறாம் அதிகாரத்தில் புலால் மறுத்தல் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 251 இலிருந்து 260 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் ஏழாம் அதிகாரத்தில் புலால் மறுத்தல் பற்றி வரும் பாடல் எண் 199 இல் புலால் மறுத்தல் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் இருபத்தி ஏழாம் அதிகாரத்தில் தவம் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 261 இலிருந்து 270 வரை) திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தில் ஐந்தாம் அதிகாரத்தில் தவம் பற்றி வரும் இருபத்திஒரு பாடல்களும் (பாடல் எண் 1624 இலிருந்து 1644வரை) கொல்லாமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்தி மூன்றாம் அதிகாரத்தில் கொல்லாமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 321 இலிருந்து 330 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் ஆறாம் அதிகாரத்தில் கொல்லாமை பற்றி வரும் இரண்டு பாடல்களும் (பாடல் எண் 197, 198) கொல்லாமை பற்றிக் கூ றுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்திநான்காம் அதிகாரத்தில் செல்வம் நிலையாமை பற்றி வரும் மூன்று குறள்களும் (குறள் எண் 331 இலிருந்து 333 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் மூன்றாம் அதிகாரத்தில் செல்வம் நிலையாமை பற்றி வரும் ஆறு பாடல்களும் (பாடல் எண் 168 இலிருந்து 173 வரை) செல்வம் நிலையாமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்திநான்காம் அதிகாரத்தில் யாக்கை நிலையாமை பற்றி வரும் ஏழு குறள்களும் (குறள் எண் 334 இலிருந்து 340 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இரண்டாம் அதிகாரத்தில் யாக்கை நிலையாமை பற்றி வரும் இருபத்தைந்து பாடல்களும் (பாடல் எண் 143 இலிருந்து 167 வரை) யாக்கை நிலையாமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்திஐந்தாம் அதிகாரத்தில் துறவு பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 341 இலிருந்து 350 வரை) திருமந்திரத்தில் ஆறாம் தந்திரத்தில் நாலாம் அதிகாரத்தில் துறவு பற்றி வரும் இரண்டு பாடல்களும் (பாடல் எண் 1614, 1623) துறவு பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் துறவறவியலில் முப்பத்திஏழாம் அதிகாரத்தில் அவா அறுத்தல் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 361 இலிருந்து 370 வரை) திருமந்திரத்தில் எட்டாம் தந்திரத்தில் நாற்பதாம் அதிகாரத்தில் அவா அறுத்தல் பற்றி வரும் பத்துப் பாடல்களும் (பாடல் எண் 2613 இலிருந்து 2622 வரை) அவா அறுத்தல் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் அறத்துப்பாலில் ஊழியலில் முப்பத்தி எட்டாம் அதிகாரத்தில் ஊழியல் பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 371 இலிருந்து 380 வரை) திருமந்திரத்தில் ஒன்பதாம் தந்திரத்தில் பதின்மூன்றாம் அதிகாரத்தில் ஊழியல் பற்றி வரும் ஆறு பாடல்களும் (பாடல் எண் 2847 இலிருந்து 2852 வரை) ஊழியல் பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் பொருட்பாலில் அரசியலில் முப்பத்தொன்பதாவது அதிகாரத்தில் அரசாட்சி முறை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 381 இலிருந்து 390 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பதின்மூன்றாவது அதிகாரத்தில் அரசாட்சி முறை பற்றி வரும் பத்துப் பாடல்களும் (பாடல் எண் 238 இலிருந்து 247 வரை) அரசாட்சி முறை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் பொருட்பாலில் அரசியலில் நாற்பதாவது அதிகாரத்தில் கல்வி பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 391 இலிருந்து 400 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இருபதாவது அதிகாரத்தில் கல்வி பற்றி வரும் ஒன்பது பாடல்களும் (பாடல் எண் 290 இலிருந்து 298 வரை) கல்வி பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் பொருட்பாலில் நட்பியலில் தொண்ணூற்றுஇரண்டாவது அதிகாரத்தில் விலைமாது பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 911 இலிருந்து 920 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் ஒன்பதாவது அதிகாரத்தில் விலைமாது பற்றி வரும் ஐந்து பாடல்களும் (பாடல் எண் 204 இலிருந்து 288 வரை) விலைமாது பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் பொருட்பாலில் நட்பியலில் தொண்ணூற்றுமூன்றாவது அதிகாரத்தில் கள்ளுண்ணாமை பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 921 இலிருந்து 930 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் இருபத்திநாலாவது அதிகாரத்தில் கள்ளுண்ணாமை பற்றி வரும் ஒன்பது பாடல்களும் (பாடல் எண் 324 இலிருந்து 332 வரை) கள்ளுண்ணாமை பற்றிக் கூறுகின்றன.

திருக்குறளில் பொருட்பாலில் குடியியலில் நூற்றி ஐந்தாவது அதிகாரத்தில் நல்குரவு பற்றி வரும் பத்துக் குறள்களும் (குறள் எண் 1041 இலிருந்து 1050 வரை) திருமந்திரத்தில் முதலாம் தந்திரத்தில் பத்தாவது அதிகாரத்தில் நல்குரவு பற்றி வரும் ஐந்து பாடல்களும் (பாடல் எண் 209 இலிருந்து 213 வரை) நல்குரவு பற்றிக் கூறுகின்றன


ஓம் பூரணம் ஓம்

மானுடம் முழுமை பெறும் பூரணம்

பூரண ஆச்சிரமம்

சுவிற்சர்லாந்து

0041 79 839 27 73

உடலினையும் மனதினையும் உறுதி செய்து
வாழ்வினை வெற்றி கொள்வோம்

யோகா, தியானம், மன ஒருங்குவிப்பு, உடல் உள நல பயில்வு, ஐபதப சாதனைகள்

Purna Ashram Gotthelfstrasse 44, 3400 Burgdorf Switzerland Tel: 0041 34 413 02 65

# THE NEED OF DEVELOPING ENGLISH FOR TODAY'S SRI LANKAN TAMIL STUDENTS





**Bavvatharani R**
Nallur - Jaffna

In the history of English education in Sri Lanka, English is taught as a second language from the primary to secondary levels. English language was used as a medium of education until 1956. The educated upper class families in these communities obtained education and went abroad to continue their under graduate and post graduate studies. Many of them completed degrees in English literature. English medium education paved the way to many Sri Lankans to work under the British regime who ruled the country until its independent in 1948. As Sri Lanka is a developing country, it faces lots of challenges in various fields including learning English as a Second Language (ESL). There are three main communities in Sri Lanka. They are Tamils, Muslims and Sinhalese. English language is taught and learnt as a second language. The Second World War too had a positive impact on the importance of English medium education and the acquisition of English as a Second Language.

After the end of the British regime native English speakers, missionaries, teachers and their families quit Sri Lanka. In 1957 the Sri Lankan leader S. W. R. D. Bandaranaike introduced mother tongue as the medium of education. For a decade the changes in the proficiency in the second language was not very noticeable. But from 1967 to date the proficiency levels in second language have fallen drastically. From then onwards the majority of the second language learners, especially the Tamil speaking students, gradually lost interest in learning English for the following reasons. The introduction of mother tongue education , less exposure to native English speaking environment, lack of trained English teachers , peer, parents and neighbors' support to learn English have made a drastic impact on today's Tamil speaking students' proficiency in English language. For about a decade the Tamil students survived to learn and use English due to their parents' knowledge of English.

The first and foremost factor which affected the Sri Lankan Tamil second language learners is the lack of English trained teachers. Today more and more English medium teachers are recruited as English teachers. Those teachers themselves have not properly learnt English grammar and other language oriented skills. the ESL text books carry lots of references to objects, activities and names in Sinhala.. The Tamils play less important roles in writing ESL text books and designing curriculum.

Tamil students had less opportunity to speak and listen in English during the thirty years of war. Whereas the Sinhala people had lot of advantageous facilities, English education links, situations and opportunities to listen and speak the language as their first language. The Tamils who are thickly populated in the North and East of Sri Lanka were further affected by the after war and gradual economic and educational developments.

A big gap in the process of learning and acquiring the second language could be observed in the Tamil speaking students of Sri Lanka today. The Tamils of Sri Lanka need to build up their knowledge. Today the Tamil students in Sri Lanka need English knowledge to openly discuss their educational, social, religious, cultural and political problems. As minorities they have to work hard to obtain good English knowledge to compete with the other communities which did not face any obstruction in education Further they need English to do reference in English for Academic and general purposes. They need exposure to the target language to speak flawlessly and with good accent to communicate, get information and pass information to impress others and to fulfill their objectives, to obtain good salary jobs, to correspond by writing in good English, and to listen in English and understand.

As English is a global language, todays Tamil students have to upgrade their English knowledge to suit their expected proficiency levels.as a result they can have access to latest news and inventions. They can upgrade their knowledge in other subjects such as science and technology by developing their English proficiency. English knowledge will enable them to enjoy English novels, films, songs and other literature. The knowledge of English is essential for travel and transportation purposes .in brief English language functions as a mode to impart their knowledge in any field. Finally todays Tamil students in Sri Lanka should realize the use and importance of English in their real life situation and take necessary steps to improve their English Knowledge for their present and future educational, professional and other objectives in their future endeavors.



# 50 வது பிறந்த நாள் கொண்டாடிய உலக கார் ஓட்டவீரன்

வ.சிவராசா



## Michael Schumacher

### 5 வருடம் தொடர்ந்தும் மயக்கநிலையில்....

உலகத்தின் கார் ஓட்ட வீரரான யேர்மனியைச் சேர்ந்த மைக்கல் சூமாக்கர் கடந்த 3.1.2019 அன்று தனது 50வது பிறந்தநாளைக் கொண்டாடினார். ஆனால் இந்தப் பிறந்தநாள் பற்றி அவருக்குத் தெரியவே தெரியாது. 2013ம் ஆண்டு நிகழ்ந்த பனிச்சறுக்கு விபத்து ஒன்றில் சிக்கியதால் இன்றுவரை அவர் ஹோமா நிலையிலேயே இருந்து வருகின்றார். உலகத்தின் வீரனுக்கு அதாவது பல்லாயிரம் கார் ஓட்ட ரசிகர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்ற வீரனுக்கு இப்படி ஒரு நிலை வந்ததா?...எனப் பலரை வேதனைக்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளாக்கி இருக்கின்றது.

மைக்கேல் சூமாக்கர் (Michael Schumacher பிறப்பு ஜனவரி 3, 1969 ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த தலைசிறந்த பார்முலா 1 (Formel-1) ஓட்டுனராவார். இவர் ஏழு முறை (1994, 1995, 2000, 2001, 2002, 2003, 2004 ஆகிய வருடங்கள்) உலக கிண்ணப் பட்டத்தை வென்றுள்ளார்.
எக்காலத்துக்கும் மிகச் சிறந்த F1 ஓட்டுநராகக் கருதப்படுகிறார் பெராரி அணிக்காக போட்டியிட்ட இவர், 91 பந்தயங்களை வென்று சாதனை படைத்தவர். பார்முலா 1 பந்தயங்களில் மிக கூடுதலான போட்டிகளில் வென்றமை, மிக விரைவான சுற்றுக்கள், மிகக் கூடுதலான முன்னணி நிலைகள், ஒரே பருவத்தில் பல போட்டிகளில் வென்றமை (2004ஆம் ஆண்டில் 13 போட்டிகளில் வென்றார்) என பல சாதனைகளுக்கு உரிமையாளர்.

2002ஆம் ஆண்டில் அப்பருவத்தின் ஒவ்வொருப் போட்டியிலும் முதல் மூவர்களில் ஒருவராகத் திகழ்ந்தது பார்முலா 1 வரலாற்றிலேயே இதுவரை யாரும் நிகழ்த்தாததாகும். அடுத்தடுத்து வாகை சூடிய வகையிலும் சாதனை புரிந்துள்ளார். பார்முலா 1 வலைத்தளத்தின்படி இந்த விளையாட்டில் புள்ளிவிவரப்படி கண்ட மிகச் சிறந்த ஓட்டுநர் இவரேயாம்.

### 2013 பனிச்சறுக்கு விபத்து

டிசம்பர் 29, 2013 அன்று சூமாக்கர் தமது மகனுடன் பிரான்சில் உள்ள ஆல்ப்ஸ் மலைச்சரிவில் பனிச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்தபோது விழுந்து கல்லில் தலை மோதியது. அப்போது அவர் பாதுகாப்பாக அறிவிக்கப்பட்ட பகுதியில் இல்லாது அதற்கு வெளியே இருந்தார். விபத்து நடந்த பதினைந்து நிமிடங்களுக்கு உள்ளாகவே இரு பனிச்சறுக்கு கண்காணிப்பாளர்களால் கவனிக்கப்பட்டு மருத்துவமனைக்கு வான்வழியே கொண்டு செல்லப்பட்டார். உயிருக்கு ஆபத்தான நிலையில் கிரனோபிள் நகரில் மூளைக் காயங்களுக்கு சிறப்பு வைத்தியம் வழங்கும் மருத்து வமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் சூமாக்கர் புறவழி மூளைக் காயத்தினால் மருந்துகளால் தூண்டப்பட்ட ஆழ்மயக்கத்தில் இருப்பதாகவும் பெருமூளை நசுங்கிஇருப்பதை மருத்துவ வரைவிகள் காட்டியதால் மூளை அழுத்தத்தை குறைக்க அவசர மூளை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப் பட்டதாகவும் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டது.பத்திரிகையாளர் சந்திப்பில் அவரது மருத்துவர்கள் அவர் தலைகவசம் அணிந்திருந்தமையாலேயே உயிர்தப்பினார் எனக் கூறினர். அறுவை சிகிச்சைக்குப் பின்னதான வரைவுகள் "பரவலான குருதிக்கசிவு கோளாறுகள்" மூளையின் இருபக்கத்திலும் காணப்படுவதாகக் கூறிய மருத்துவர்களுக்கு அதன் விளைவுகளை கூற இயலவில்லை. அவரது நெருங்கிய நண்பரும் மூளை மற்றும் தண்டுவட காய நிபுணருமான மருத்துவர் கெரார்டு சையாந்த் சிகிச்சை அளித்து வருகிறார். இன்றுவரை 2019 தைமாதம் 5 வருடங்களாகக் (ஹோமா) சுயநினைவு இழந்த நிலையிலேயே இருந்து வருகிறார்.

### மகன் Mick Schumacher

சூமாக்கரின் மனைவி பெயர் Corinna Betsch. 1995ம் ஆண்டு திருமணம் செய்த இவருக்கு ஒரு ஆண் Mick Schumacher ஒரு பெண் Gina-Maria Schumacher என இரு பிள்ளைகள். அவரது மகன் தற்போது ஐரோப்பா ரீதியான போட்டிகளில் பங்குபற்றி வருகிறார். சில போட்டிகளில் வெற்றியும் பெற்றிருக்கிறார். தந்தையைப் போல் தனயனும் வெற்றிகள் பல குவிப்பார் என ரசிகர்களால் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.
சூமாக்கரின் வெற்றிகள் பற்றிய சிறுகுறிப்பைப் பார்ப்போம்.

-முதல் பந்தயம் - 1991 பெல்ஜியம்
-முதல் வெற்றி 1992 பெல்ஜியம்
-கடைசி வெற்றி 2006 சீனா
-கடைசிப் பந்தயம் - 2011 யேர்மனி
-சர்வதேச பெரு வெற்றிகள் - 7
-பெற்ற வெற்றிகள் - 91
-2வது இரண்டாவது பரிசு வெற்றிகள் - 43
-ஒரே நாட்டில் (பிரான்ஸ்) பெற்ற வெற்றிகள் - 8
-மிக வேகமாக ஓடிமுடித்த போட்டிகள் - 77
-ஒரே ஆண்டில் பெற்ற வெற்றிகள் - 13
-போட்டிகளில் ஓடிய தூரம் - 24.148 மு.ஆ
-உலக நட்சத்திரமாகத் திகழ்ந்த நாட்கள் - 7.763



மகன் Mick Schumacher

இப்படியாகப் பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர், உலக கார் ஓட்ட ரசிகர்களின் ஒப்பற்ற வீரன், ரசிகன் இன்று படுத்த படுக்கையாகக் கிடந்து கொண்டே தனது 50வது பிறந்தநாளைக் கொண்டாடியுள்ளார். அடுத்த பிறந்தநாளுக்கு முன்பாக அவர் உடல் சுகநலம் பெற்றுவர எல்லோரும் மன்றாடுவோம்.

விநாயகா ஜோதிட நிலையம்
எவ்வித பிரச்சினைகளுக்கும் 09 நாட்களுக்குள் தீர்வு பெற்றுத் தரப்படும்..!
பண்டித் துர்க்கா பிரசாத்
குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், தொழில், மனை, அபிவிருத்தி, லட்சுமிகடாட்சம் வாகனம், வீசாப் பிழச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், ஆரோக்கியம், பாக்கியம், வியாழ முன்னேற்றம் செய்வினை கோளாறுகள், பேய், பிசாசுத் தொந்தரவுகள், கண்திருஸ்டி, நாக தோஷம் மற்றும் உங்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும்
உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!
பேசும் மொழி - ஆங்கிலம், ஹிந்தி, ஜேர்மன் மற்றும் தமிழ்
பார்வை நேரம் - வாரத்தின் 7 நாட்களும்
காலை 08.00 மணி முதல் மாலை 09.00 மணி வரை
Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655
PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach

Warendorf மாவட்டத்தில்
மாபெரும் அங்காடி
M point Supermarkt
M POINT Supermarkt
உங்கள் இல்லத்துக்கு தேவையான
அனைத்து மளிகைப்பொருட்களையும்
ஒரே இடத்தில் தரமாகவும் மலிவாகவும்
பெற்றிட நாடுங்கள்
M-Point Supermarkt
Von-Gallen Str - 5
48336 Sassenberg
(Kreis Warendorf )
0179 48 555 54 Tel: 02583 30 30 300
e.mail: mpointsupermarkt@yahoo.de

# திரு பா.நந்தகுமார் அவர்களுக்கு “அமிர்தானந்த சுரபி” விருது வழங்கிக் கௌரவம்.

## நந்தீஸ் உணவக குழுமத்தினர் சார்பாக வெற்றிமணி வழங்கியது.



யேர்மனி நந்தீஸ் உணவக உரிமையாளர் திரு.பாலகிருஸ்ணன் நந்தகுமார் அவர்களுக்கு விருதும், பாரட்டு நிகழ்வினையும் நந்தீஸ் உணவக குழுமத்தினர் ஒன்றிணைந்து நடத்தினர்.

மேற்படி நிகழ்வு கடந்த 27.12.2018 கிறிபில் நகரில் திரு.திருமதி நந்தகுமார் அவர்களின் மகள் பிறின்சிகா அவர்களின் முதலாவது பிறந்த நாள் வைபவத்தில் ஒரு பகுதியாக இடம்பெற்றது.
இந்த கௌரவிப்பு நிகழ்வினை சிறப்புற கி.த.கவிமாமணி தொகுத்து வழங்க வாழ்துரையை சுவற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலய குரு சிவ.ஜெயந்தி நாதக் குருக்கள் நிகழ்தினார்.

அதனைத் தொடர்ந்து நிகழ்வின் பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பித்த வெற்றிமணி சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் அவர்கள் திரு நந்தகுமார் அவர்களின் தனித்துவத் தன்மையையும் அவர் தன்னைத்தானே தேடிக்கொண்டு தன் ஆற்றலை சிறப்பாக வெளிபடுத்திய தன்மையையும் எடுத்துரைத்தார். அதனைத் தொடர்ந்து நந்தீஸ் உணவக குழுமத்தினர் சார்பாக கலாநிதி சிவகுமாரன் தம்பதிகள் திரு பாலகிருஷ்ணன் நந்தகுமார் அவர்களுக்கு “அமிர்தானந்த சுரபி” என்னும் விருதினை வழங்கி கௌரவித்தனர்.
அதனைத் தொடர்ந்து கலைஞானமணி தி.லம்போதரன் அன்பர் நந்தகுமார் அவர்களுக்கு வாழ்த்து மடல் வடிவம் தயாரித்து அதனுள் ”அமிர்தானந்த சுரபி” என்ற சிறப்பு விருதினையும் இணைத்து வழங்கியிருந்தார். அவ்வாழ்த்தினை எசன் அறநெறிப்பாடசாலை அதிபர் திரு நயினை விஜயன் அவர்கள் வாசித்து வழங்கி, வாழ்த்தினார். தொடர்ந்து உலகக்கோவில் இணையத்தள அதிபர் திருசி.இராஜகருணா, அறிவிப்பாளர் சகநாயகன் திரு.சி.சக்திவேல் ஆகியோர் வாழ்த்துரை நிகழ்தினார்கள். நன்றி தெரிவித்து திரு.இன்பராஜ் அவர்கள் உரையாற்றினார்.
பி.குறிப்பு:
பிறந்த நாள் விழாவில் நம் மண்ணின் வாசம் மாறாது, சுண்டல் தள்ளுவண்டிலில் சுண்டல் பரிமாறியதும் (சுண்டல் வண்டியைத் தயாரித்தவர் துஷி டெக்கோ உரிமையாளர் தி.துஷி) ஒற்றைத் திருக்கை வண்டியில் பிறந்தநாள் குழந்தையை அழைத்துவந்ததும், நந்தீஸ் குழுமத்தின் தாய்மண் பற்றை பறைசாற்றியது. வண்டில் மேடை அலங்காரம் தாயகத்தை நினைவூட்டலாக அமைந்தது. இதனை துஷ்யந்தன் சபிலா தம்பதிகள் அசத்தலாக அமைத்திருந்தனர்.

அத்துடன் அமிர்தானந்த சுரபி பாலகிருஷ்ணன் நந்தகுமார் அவர்கள் தாயத்திலும் தான் வாழும் நாட்டிலும் பல தொண்டுகளை அமைதியாக தன் முகம்காட்டாது, தன்பணி செய்துகிடப்பதே என செய்து வாழ்பவர். பொதுவாக முன்நிற்காமல் பின்நின்று பல நற்காரியங்களை நடத்தும் சிறந்த குணம் படைத்தவர்.

இவ்விழாவினை முன்னெடுத்த நந்தீஸ் குழுமத்திற்கும் திரு.கமல்ராஜ் திரு.குணரத்தினம்.செல்வகுமாரன், அவர்களுக்கும் வெற்றிமணியின் வாழ்த் துக்கள். ஒரு தொழில் அதிபரை அவர்களுடன் பணியாற்றும் பண்பாளர்களின் பாராட்டும் குணம் போற்றப்படவேண்டியதாகும்.

## சுண்டல் வண்டி








# இருமனநிலைகள்

## சாக்கடையும் மனிதர்களும்




**ஏலையா க.முருகதாசன்**

சாக்கடை எனும் போது அதன் தோற்றமும் பெருபான்மையான மனிதர்களால் வெறுக்கத்தக்கதாகவும்,அருவருப்பானதாகவுமே பார்க்கப் படுகின்றது.
ஆனால் இந்த சாக்கடைகளை உற்பத்தி செய்பவர்களே மனிதர்கள்தான். சாக்கடைகளை இயற்கை ஒரு போதுமே உற்பத்தி செய்வில்லை.

இயற்கை மனிதர்களுக்கு தேவையான கடல்களையும் ஆறுகளையும் குளங்களையும் நீர்வீழ்ச்சிகளையும் கொடுத்து அவர்களைமகிழ்ச்சியாக வாழ உறுதுணையாக நின்றது.
ஆனால் மனிதர்கள்தான் இயற்கையை மதிக்காமல் இயற்கைக்கு துரோகம் செய்தார்கள்.
நவீனம் என்ற பெயரில் இரசாயன உற்பத்திகளை உற்பத்தி செய்து அதன் கழிவுகளை கடலில் கொட்டி கடலை அசுத்தமாக்கினார்கள்.கடலுக்குள் வாழும் உயிரினங்களை சாகடித்தார்கள்.
குடிக்கும் நன்னீராக இருந்த ஆறுகளுக்குள் அதன் சுத்தத்தையே அசுத்தமாக்கி நாசமாக்கினார்கள்.
ஆற்றினில் வாழ்ந்த உயிரினங்கள் அழிக்கப்பட்டன.ஆறு மண்ணை அரித்துவிடாமலிருக்க கரையோரங்களில் படர்ந்து காணப்பட்ட புல்பூண்டுகள் யாவும் கருகி அழிந்தன.
மிதமான விஞ்ஞான வளர்ச்சி மனித குலத்தையே ஒரு நாள் பூண்டோடு அழித்துவிடும் என்பதை மனிதகுலம் உணராமலிருக்கின்றது.
சாக்கடை என்று சொல்லி அருவருக்கும் மனதர்கள் தாங்கள் ஒவ்வொருவரும் சாக்கடையைச் சுமந்து நிற்கும் மனிதர்கள் என்பதை மறந்துவிடுகிறார்கள்.
உண்பதற்கும், சுவாசிப்பதற்கும், பார்ப்பதற்கும், கேட்பதற்கும், கழிவினை அகற்றுவதற்கும் இருக்கும் உறுப்புக்களை சுத்தப்படுத்தாமல் ஒருநாள்கூட விட்டால் அவை துர்நாற்றம் வீசும் உறுப்புக்களாக மாறிவிடும் என்பதை மனிதன் ஏனோ மறந்து விடுகிறான்.

துர்நாற்றம் வீசும் மனிதர்களுடன் அருகிருக்கவே சக மனிதன் அருவருப் படைவான். உணவு செரிமானம் அடைந்து உடலுக்கு தேவையான சத்துக்கள் உறிஞ்சப்பட்டு மிகுதி சக்கையான மலம், வெளியேறும் காலம் வரை அதே துர்நாற்றத்துடன் உடலுக்குள்ளேயே தங்கி நிற்பதை மனிதன் நினைத்துப் பார்க்கின்றானா.

குடிக்கும் நீர் சிறுநீரகத்தால் வடித்தெடுக்கப்பட்டு உடலுக்குத் தேவையானது போக மிகுதி வெளியேறும் காலம் வரை அதே துர்நாற்றத்துடன் மூத்திரப் பைக்குள் சேமித்து வைப்பதை அறி மனிதா.
வாசனைச் சவர்க்காரத்தை உடலெல்லாம் தேய்த்துப் பூசி குளித்து வாசனைத் திரவியங்களால் உடலைமணமாக்கி, வியர்வைத் துர்நாற்றத்தை வெளிவராமல் தடுத்து, அழகழகான உடைகள் உடுத்தும் மனிதன், அழகிய உடையாலும் வாசனைச் சவர்க்கார குளியலாலும், வாசனைத் திரவியப் பூச்சாலும் மூடிமறைக்கும் மனிதனுக்குள்ளேதான் துர்நாற்றம் வீசும் மூத்திரமும் மலமும் உண்டென அறி மனிதா.

உன் உடலிலிருந்து வெளியேற்றப்படும் மூத்திரமும் மலமும் கழிவுக் கால்வாயில் கலந்து சாக்கடையாகி வாய்க்கால் வழி ஓடி கடலில் கலக்கின்றன.
புலம்பெயர் தேசங்களில் எம்மவர்கள் பொதுமண்டபங்களில் கழிவிடங்களைப் பயன்படுத்துவதில் இரு வேறுபாடுகளைக் கடைப்பிடிக்கிறார்கள்.
தமிழர்களால் நடத்தப்படும் நிகழ்வுகளில்,கழிவிடங்களைப் பயன்படுத்துவதில் தமிழர்கள் கழிவிடங்களை அருவருப்புடன் பார்க்கிறார்கள்.
சுத்தத்தைப் பேணுவதில் அலட்சியமாக நடந்து கொள்கிறார்கள்.ஏனோ தானோ என நடக்கிறார்கள். கைதுடைக்கும் தாள்களை குப்பைக்கூடைக்குள் போடுவதில்லை. குப்பைக்கூடையைச் சற்றி தாள்களை கசக்கி எறிகிறார்கள். கழிவிடங்களில் தேவையற்று நீரைச் சிந்துகிறார்கள்.

ஆனால் இதே தமிழர்கள் ஜேர்மனிய நிகழ்வுகளுக்கு போகும் போது மட்டும் பக்குவமாக நடந்து கொள்கிறார்கள். கழிவிடங்களை சுத்தமாகப் பேணுகிறார்கள்.

இந்த இருமனநிலைகள் ஏன்?





## திரு. கந்தையா அம்பலவாணபிள்ளை அவர்களுக்கு பாராட்டும் மதிப்பளிப்பும்

1988ம் ஆண்டு என்னெப்பெற்றால் நகரில் இலங்கைத்தமிழர் நலன்புரிச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கத்தின் 4வது தலைவராக 1994ம் ஆண்டு முதல் திரு. கந்தையா அம்பலவாணபிள்ளை அவர்கள் தலைவராக இருந்து பணியாற்றியமைக்காக நலன்புரிச்சங்க இலச்சினை பொறிக்கப்பட்ட தங்க பதக்கமும் அணிவித்து கொரவித்தனா். அத்துடன். சுவெற்றாநகர் கனகதுர்க்கா அம்பாள் ஆலயத்திற்கு திருவிழாக்கள் விசேட தினங்கள் உட்பட அழகிய வர்ண வேலைகளுடன் கூடிய பத்திரிகைகளை அச்சுப்பதிப்புச் செய்து தந்துதவியமைக்காக ஆலயகுரு தூக்காபூஜாதுரந்தரர் சிவஸ்ரீ ஜெயந்திநாதக் குருக்கள், நிர்வாக சபையினர், “கலைஞான வித்தகர்;; என்னும் விருதை வழங்கிக் கௌரவித்தனர். தகவல் புகைப்படங்கள். ஆன்மீகத்தென்றல் தம்பி புவனேந்திரன்.



# முருகபூபதியின் ”சொல்லத்தவறிய கதைகள்” பாரிஸில் அறிமுகம்




பிரபல எழுத்தாளர் முருகபூபதி

அவுஸ்திரேலியா மெல்பனில் வதியும் படைப்பிலக்கியவாதியும், ஊடகவியலாளருமான முருகபூபதியின் புதிய வரவு, **சொல்லத்தவறிய கதைகள்** நூலின் அறிமுக அரங்கும், முருகபூபதியுடனான இலக்கியச் சந்திப்பும் எதிர்வரும் பெப்ரவரி 03 ஆம் திகதி (03-02-2019) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு பாரிஸில் எழுத்தாளர் வாசுதேவன் தலைமையில் நடைபெறும். நிகழ்ச்சி நடைபெறும் முகவரி: TIASCI 13 RUE DE L'AQUEDUC 75010 PARIS.

பாரிஸிலிருந்து வெளியாகும் ” நடு” இணைய இதழின் ஏற்பாட்டில் இந்நிகழ்ச்சியை ”நடு” ஆசிரியர் எழுத்தாளர் கோமகன் ஒழுங்குசெய்துள்ளார்.

சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், பயண இலக்கியம், கடித இலக்கியம், நேர்காணல், ஆய்வு, பத்தி எழுத்துக்கள் முதலான துறைகளில் எழுதிவரும் முருகபூபதி, சொல்லமறந்த கதைகள் ( தமிழ்நாடு மலைகள் பதிப்பகம்) - சொல்லவேண்டிய கதைகள் (இலங்கை ஜீவநதி வெளியீடு) ஆகிய நூல்களை ஏற்கனவே வரவாக்கியவர். அதன் தொடர்ச்சியாக வெளியாகும் புதியநூல்: சொல்லத்தவறிய கதைகள்.

இதனை இலங்கையில் மகிழ் பதிப்பகத்தின் சார்பாக எழுத்தாளர் கருணாகரன் வெளியிட்டுள்ளார். இந்நூலின் முகப்பினை சிட்னியில் வதியும் எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளரும் ஒளிப்படக்கலைஞியுமான கீதா மதிவாணன் வடிவமைத்துள்ளார். ”சொல்லத்தவறிய கதைகள் ஒருவகையில் வரலாற்றின் சாயல்கொண்டவை. இன்னொருவகையில் சமூகவியலின்பாற்பட்டவை. இன்னொரு கோணத்தில் எம்முள்ளும் எம்மைச்சுற்றியும் நிகழ்ந்தவற்றின் கதைகள். எல்லாவற்றுக்கும் அப்பால் நாம் கவனித்தேயாகவேண்டிய கதைகள். முருகபூபதி இலக்கியவாதியாகவும் ஊடகச்செயற் பாட்டாளராகவும் இருப்பதனால் இந்தப் பதிவுகள், வாசிப்பு சுவாரசியத்தை அளிக்கின்றன. கூடவே ஆழ்தரி சனத்தையும் கொண்டிருக்கின்றன.




03-02-2019 ஞாயிறு மாலை 4.00 மணிக்கு TIASCI 13 RUE DE L'AQUEDUC 75010 PARIS.

இங்கே ஆழ்தரிசனமாக வெளிப் பாடடைவது, இவற்றில் உள்ள உண்மையும் சமூக அக்கறையுமாகும். சொல்லத்தவறிய கதைகள் எப்படிசொல்லப் படுவதற்கான அவசியத்தைக் கொண்டிருக்கின்றனவோ அதைப்போல அவற்றை நாமும் வாசித்தே ஆகவேண்டும் என்பது அவசியமாகிறது. இன்றைய இந்தப்பதிவுகளும் வெளிப்பாடுகளும் நாளைய வரலாற்றுக்கு மிகப்பெரிய ஒளியூட்டியாக இருக்கும்” - ( மகிழ்)

---

## 2021ம் ஆண்டு வரை “settled status” க்காக இங்கிலாந்தில் (UK) விண்ணப்பிக்கலாம்.

சிவஜெனனி




மில்லியன் கணக்கான ஐரோப்பியக் குடியுரிமையுள்ளோர் (EU Citizens) ஆனி 2021ம் ஆண்டு வரை “settled status” க்காக இங்கிலாந்தில் (UK) விண்ணப்பிக்கலாம்.

இதில் இருக்கும் பிரச்சனை என்னவென்றால் சிலருக்கு எப்படி பதிவு செய்வது எனத் தெரியாது அல்லது செய்யும் முறை தெரியாமல் இருக்கும். காரணம் இதற்கான பதிவுகள் கணனிமூலமே மேற்கொள்ளப்படுகின்றது.

3.5மில்லியன் ஐரோப்பியர் இங்கிலாந்தில் வாழ்கின்றனர்.இதில் மூன்றில் ஒரு பங்கினர் விண்ணப்பிப்பதற்கு சிரமப்படுவார்கள் என்று Think-tank British Future எச்சரிக்கை விடுத்துள்ளது. அந்த 1/3 க்குள் இருப்பவர்கள் யார் யார் என்று பார்த்தால்: வயோதிபர்கள், கணனி மற்றும் ஆங்கில அறிவு குறைந்தவர்கள், ஏனெனில் விண்ணப்பிப்பதற்கு கைத்தொலைபேசி மூலம் புகைப்படம் மற்றும் ஆவணங்களாகியவற்றை அனுப்பவேண்டும். விரலுக்குள் இருக்கும் விண்ணப்பிக்கும் ஆற்றல்

இப் பிரச்சனைக்கு உதவும் முகமாக அரசாங்கம் எடுத்திருக்கும் நட வடிக்கைகள் பின்வருமாறு: மொழிபெயற்சி, தொலைபேசி மூலம் ஆலோசனை வழங்குதல், embassyயின் ஆதரவும் விளக்கமும்.

சென்ற வருடம் (2018) 29,987 விண்ணப்பித்துள்ளார்கள் இதில் 27,211 பிரஜைகளுக்கு மறுமொழி சாதகமாகவே வந்துள்ளது. இன்னும் ஒருவருக்கும் எதிர்மறையாக ஒன்றும் வரவில்லை. மொத்தத்தில் மொழிப்பிரச்சினை கணனி அறிவீன்மை தவிர வேறு எந்தச் சிக்கலும் இல்லை!



# போரை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டு மீண்டும் ரஜினி திரையை தேர்ந்தெடுக்கலாம்!



**கெட்ட பயலா இருந்த காளி, பேட்ட பயலா உருமாறிய படம் பேட்ட !**

**வெற்றிமைந்தன்**



ரஜினி படத்துக்கு கதை கேக்கறதும், சூரியனுக்கு நிலக்கரியை ஏற்றுமதி செய்றதும் தேவையற்ற சங்கதிகள். ரஜினி படத்தின் வெற்றி தோல்வியை கதைகளை விட, சொல்லும் விதமே நிர்ணயிக்கிறது. உடனே முள்ளும் மலரும், ஆறிலிருந்து அறுபது வரைன்னு பேச ஆரம்பிக்காதீங்க, சில விதி விலக்குகள் உண்டு.

ரஜினியின் வெற்றிப்படங்களைக் கூட்டிக் கழித்து அலசிப் பார்த்தால் “பழிவாங்குடா“ எனும் ஒற்றை வரியில் அடங்கிவிடுபவை தான் பெரும்பாலானவை. அதை எப்படி திரைக்கதையாக்கியிருக்கிறார்கள். எப்படியெல்லாம் ரஜினியிசத்தை அள்ளித் தெளித்திருக்கிறார்கள் என்பதை வைத்தே படம் பாக்ஸ் ஆபீஸில் நிலைப்பதா, பாக்ஸ்லேயே நிலைப்பதா என்பது முடிவாகிறது. அந்த வகையில் ரஜினியின் அத்தனை பலங்களையும் ஒவ்வொன்றாய் எடுத்து, பிரேமுக்கு பிரேம் அலங்காரப்படுத்தியிருக்கும் படம் தான் பேட்ட.

”வயசானாலும் உன் அழகும் இளமையும் இன்னும் போகல” என படையப்பாவில் ரம்யா கிருஷ்ணன் பில்டப் கொடுப்பார். அந்த படம் வந்தே இருபது வருடங்கள் ஆகி விட்டது. அந்த வசனத்தை இந்தப் படத்திலும் பயன்படுத்தலாம் எனுமளவுக்கு, மேக்கப்பும், ஆடைகளும் கேமராவும் ரஜினியை அழகுபடுத்தியிருக்கின்றன.

அட இந்த சீன் பாஷா மாதிரி, அட இது நல்லவனுக்கு நல்லவன் ஸ்டைல், ஆஹா இது தளபதி காட்சி என ரசிகர்கள் காட்சிக்குக் காட்சி சிலாகிக்கிறார்கள். பழைய படங்களையெல்லாம் நினைவுபடுத்தி இதை ஒரு திருவிழா மாதிரி கொண்டாடுகிறார்கள். அது தான் இந்தப் படத்தின் வெற்றி.

அனிருத்தின் இசை கூட ரஜினியின் பிரபல பின்னணி இசைகளின் கோர்வையாய் இருப்பது ஒரு தனி ரசனை. அதை தனது ஸ்பெஷல் முத்திரைகளுடிடன் கலந்து கொடுத்திருக்கிறார். பொதுவாக அனிருத் இசையை ம்யூட் போட்டுக் கேட்டால் கூட காதில் இரத்தம் வடியும். இதில் அந்த சத்தங்களில் சண்டை இல்லாமல் இருப்பது ஒரு ஆறுதல்.

கதாபாத்திரமாகவே மாறிவிடும் விஜய் சேதுபதியின் உடல் மொழியும் நடிப்பும் ஆஹா ரகம் என்றால், வெறும் கண்களாலேயே நடித்து முடித்து விடும் நவாசுதீன் சித்திக் ஆஹாஹா ரகம். ஆனால் பெரிய வாழையிலையில் வைத்த ஒரு தேக்கரண்டி பிரியாணி போல அவர்களுடைய பார்ட் சட்டென முடிந்து விடுகிறது. என்ன தான் இருந்தாலும் அந்த அக்மார்க் மதுரைக்கார பாம்படப் பாட்டியின் வீட்டில் மகேந்திரனின் ஒரு மகனாக நவாசுதீனையும் இன்னொரு மகனாக அருவா ஆறுமுக மீசையையும் பார்ப்பது உறுத்துகிறது. மகளின் முகத்திலும் மதுரை சாயல் இல்லை. சரி, குடும்பத்துல எதுக்கு பிரச்சினை கிளப்பிகிட்டு... வேண்டாம் விட்டுடுவோம்.

ஓ.. சொல்ல மறந்து விட்டேன் சிம்ரன், திரிஷா இருவரையும் பார்த்த ஞாபகம். அட, சசிகுமாரைக் கூட பார்த்தேனே, ஓ பாபி சிம்ஹா கூட வந்தாரே.. இப்படித் தான் மற்ற கதாபாத்திரங்களைப் பற்றி சொல்ல வேண்டியிருக்கிறது. காளியை திரையுலகில் அறிமுகப் படுத்திய மகேந்திரனையே ரெண்டு காட்சியோடு மட்டையாக்கியிருக்கிறார் சுப்புராஜ்ன்னா பாத்துக்கோங்க.

தொன்னூறுகளில் ஒட்டப்படும் போஸ்டர்களில் கடைசியில் ஒரு வரி சேர்ப்பார்கள். ”பாட்டு பைட்டு சூப்பர்”. அதை இதிலும் சேர்க்கலாம், ரசிக்க வைக்கிறார்கள்.

ரஜினிக்கு வயசாயிடுச்சு, அந்த நிஜத்தை ஒத்துக் கொள்ள வேண்டும். அதை முடிந்தவரை ஸ்டாக மாற்ற கேமரா கோணங்களையும், அரையிருட்டுக் காட்சிகளையும், மெல்லிய புகைமண்டலப் போர்வைகளையும் பயன்படுத்தியிருப்பது சிறப்பு, மிகச் சிறப்பு.

முதல் பாதி அழகான இயற்கைக் காட்சிகளுடனும், சுவாரஸ்யங்களுடனும், பில்டப்களுடனும் பிரமாதப்படுத்துகிறது. பாஷாவைப் போல ! இரண்டாவது பாதி, அந்த பாஷாவின் பில்டப்பை ஈடு செய்யவில்லை என்பது தான் நிஜம். ஆனாலும் பரபரக்கிறது. ஒருவகையில் இரண்டு வில்லன் குரூப், இரண்டு கதைக் களம் என கடைசியில் இரண்டு ரஜினி படங்கள் பார்த்த உணர்வு எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

இது எதிர்பார்த்த டுவிஸ்ட் தான் என சினிமா ஜாம்பவான்கள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, “அட இது நம்ம லிஸ்ட்லயே இல்லையே“ என இன்னொரு டுவிஸ்ட் கொடுத்து பீட்ஸா பரந்தாமன் கார்த்திக் சுப்புராஜ் வியக்க வைக்கிறார்.

ஆங்காங்கே வைத்திருக்கும அரசியல் பொடிகள் விசிலடிப்பவர்களுக்கானது. ஒவ்வொரு காட்சியையும் ரஜினியின் அறிமுகக் காட்சியைப் போல செதுக்கியிருப்பது இயக்குனரின் உள்ளே ஒளிந்திருக்கும் ரஜினி ரசிகருக்கானது. நாடி நரம்பு ரத்தம் சதை எல்லாத்துலயும் ரஜினி வெறி ஊறிப்போன ஒருவனிடமிருந்து வழிந்த ஒரு படம் இது.

காலா படத்தின் ஆழமான சமூகப் பார்வையை இதில் பார்க்க முடியாது. ஆனால் ரஜினியிடம் ரசிகர்கள் எதை எதிர்பார்க்கிறார்களோ அதை இதில் நிச்சயம் பார்க்கலாம்.

**போர்வரும்போது சொல்கின்றேன் இரசிகர்களே தயாராக இருங்கள் என தன் அரசியல் வரவுகுறித்து ஒருவருடங்களுக்கு முன் ரஜினி சொன்னவர்.**

**அந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டு மீண்டும் ரஜினி திரையை தேர்ந்தெடுக்கலாம். வெற்றி சர்வ நிச்சயம் என்பது இந்தப் படம் ரஜினிக்குச் சொல்லும் பாடம்.**




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
Ria Money Transfer
MoneyGram
துரித பண மாற்றுச் சேவை!
VALUTRANS
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
0170 334 4059
பிருந்தாஸ்
Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976


Photography
Video Filming
Album Making
Graphic Desiging
Your Dreams Comes True
AKR Visualizers
professional photography & cinematography
BOOK A SESSION NOW AT
0049 231 5337 5366
0049 162 803 1647
Rheinische Str. 72
44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


Dortmund மாநகரில்
StaR Impex :
Inh :K.Sivasubramaniam
தாயக மரக்கறிகள்
பழவகைகள் மற்றும்
உணவுப் பொருட்களை
மொத்தமாக
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
Feb.14
Happy Valentines Day!
Star - Impex
Asiatische & Afrikanische
Lebensmittel Grosshandel
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Franziusstrasse 150 (Tor 3)
DE:44147 Dortmund
Tel:0231 860 2696
Fax:0231 860 2698